

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 1ம் நாள் நிறைமதி (17-09-2024 செவ்வாய்க்கிழமை) வெளியீடு +94 21 222 9722



**நீத்தார் கடன் செய்ய சிறந்த திதி நாள் பேறொடுக்க மறைமதி (மாலயம்)**

**இம்முறை புரட்டாசி 16 (ஒக் 2, 2024) புதன்கிழமை அன்று நோற்கப்படும்**

நகுலேச்சரம் - யாழ்ப்பாணம்

உ

திருச்சிற்றம்பலம்

தமிழர்களாகிய நாம்
எங்கள் பிள்ளைகளுக்கு

# தூய தமிழில் பெயர் வைப்போம்

# பெயர் எங்கள் அடையாளம்

பிறந்த நட்சத்திரம் மற்றும்
பிறப்பு எண் அடிப்படையில்
பெயர் தெரிவு செய்ய

**www.peyar.org**

இது ஒரு தென்னாடு முன்னெடுப்பு ஆகும்



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




## பத்தியும் இல்லை பயமும் இல்லை என்றால் வினைதான்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

சமூகத் தளங்களில், குறிப்பாக ஆன்மீக மற்றும் சமயத் தளங்களில் இயங்கும் தலைவர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மற்றும் அவர்களுடன் சார்ந்த தொண்டர்கள் பத்தி சிரத்தையுடன் இயங்கவேண்டும். இறைவன் இருக்கிறான் என்று தான், அவனை வைத்து சமூகத்தில் தொண்டாற்ற வருகிறார்கள். ஆனால் வந்தபின் அவர்களின் நடவடிக்கைகளைப் பார்க்க கடவுளே இல்லை என்ற எண்ணத்தினை அடியவர்களுக்கு உருவாக்குகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இது பல இடங்களில் நடைபெறும் செயல் என்பதால் எழுதுகிறேன், சில இடங்கள் சிறப்பாக நடைபெறுகின்றது என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

உண்மையில் நல்ல விடயங்களை நாங்கள் எங்கிருந்தாலும் அவற்றினை உள்வாங்கி பயணிக்க வேண்டும். நல்லூர் கந்தசுவாமி திருக்கோயிலில் இருந்து சில முருகன் கோயில்கள் அலங்காரம், சோடனை, குருக்களின் வேட்டி நிறம், மேளம், தாளம் எடுப்பதுடன் நிறுத்திவிடாது நல்லூர் கோயிலில் கோயில் நிர்வாகியின் பண்புகளையும், பக்குவத்தினையும் சேர்த்து எடுக்கவேண்டும். சில கோயில்களில் நிர்வாக சபையினர் மற்றும் அவர் குடும்பத்தினர் கோயிலை குத்தகைக்கு எடுத்தது போல் சுவாமியை, பூசைகளை முழுமையாக மறைத்தவண்ணம், எந்தவித பத்தி சிரத்தையும் இல்லாது, மற்ற அடியவர்களை மதியாது நடக்கும் காட்சிகள் மனதிற்கு வேதனை தருகிறது.

கோயிலுக்குள் புகைப்படம் எடுக்கக்கூடாது என்று பெயர்ப்பலகை தொங்கும். ஆனால் நிர்வாகிகள் மற்றும் கோயில் நிர்வாகம் ஆயிரம் புகைப்படக் கருவிகள், கைபேசிகள் என்று ஒவ்வொரு தங்கள் அசைவையும் படம் எடுப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. முகப் புத்தகத்தில் ஆயிரம் படம் இருந்தால் அதில் சுவாமியின் படம் பத்தினை தாண்டாது. அதிலும் சிறியரக பறக்கும் ஊர்திவேறு. அப்படியானால் கோயிலினுள் புகைப்படம் எடுக்கக்கூடாது என்ற பெயர்பலகையை கழற்றிவிட்டு அனைவருக்கும் அந்த வசதியை கொடுங்கள்.

நிர்வாகத் தெரிவு, போட்டிகள் என்பது தமிழரிடம் ஊறிப்போன ஒன்று. ஆனால் அது அரசியல் தேர்தல் களங்களிலும் பார்க்க சில கோயில்களில் பெருகிப்போய் உள்ளது. பத்தர்கள் அனைவரையும் கும்பிடவிடாமல் தனக்கு வாக்கு செலுத்தவும் என்று சொன்னாலும் பரவாயில்லை ஆனால் அவருக்கு போடவேண்டாம் என்று எதிர்பிரச்சாரம் செய்யும் கூட்டங்களும் உள்ளன. இதனை எங்கள் அடுத்த சமுதாயமும் உள்வாங்கிவிடுமோ என்ற ஆதங்கத்தில்தான் இந்த ஆசிரியர் கட்டுரை.

கோயில் நிர்வாகத்தில் இருப்பவர்கள் குறைந்தது சமய தீக்கையாவது பெற்று , தினசரி அனுட்டானங்களைச் செய்து இறைவனை வழிபாடு செய்பவர்களாக இருந்தால் சிறப்பானது. அத்துடன் சிறியளவேனும் ஆகம மற்றும் திருமுறை அறிவினை உள்வாங்கி செயற்படவேண்டும். இல்லையேல் சொல்புத்திக்கு ஆடவேண்டிய நிர்வாகமாகவே இருக்கும். மீண்டும் வலியுறுத்துவது என்ன நோக்கத்திற்காக கோயிலை மற்றும் அமைப்பினை எங்கள் முன்னோர்கள் ஆரம்பித்தார்களோ, அந்த நோக்கத்திற்கு அமைவாக நிர்வாகம் இயங்குகிறதா என்ற பார்வை இருக்கவேண்டும். இல்லையேல் இறைபணி என்று வந்து வினைகளை அள்ளிச் சுமக்கும் உயிர்களாகிவிடுவோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**




# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




## தென்னாடு நிறைமதி அறிக்கை

(19-08-2024) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 3ம் நாள் திங்கட்கிழமை அன்று நாற்பத்து எட்டாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. இவ்வெளி யீடு தொடக்கம் தென்னாடு இதழ் மலர் வடிவில் மாற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத் தின் முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா அவர்கள், வடமாகாண பிரதம செயலாளர் சிவத்திரு. இலட்சுமணன் இளங்கோவன் அவர்கள், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சிவத்திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்கள், கொழும்பு கென்ட் டவர் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி சிவத்திரு. நடராஜா இராஜ்குமார் அவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் சிவத்திரு. சிவரூபன் தங்க வேல் அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் இந்நிகழ்வில் தமிழ்ப் பெயர் இணைய அறிமுக விழாவும் இடம்பெற்றியி ருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(20-08-2024) – தென்னாடு சிவமடத்தின் முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் அவர்களின் தாயார் வழி உறவினர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன. (20-08-2024) – அமரர் தெய்வேந்திரம்பிள்ளை அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (21-08-2024)– அமரர் இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அவர்களின் திருவடிபேற்று வழிபாடுகள் இடம்பெற்றன. (21-08-2024) – அமரர் தெய்வேந்திரம்பிள்ளை இரத் தினபூபதி அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (31-08-2024) – மட்டக்களப்பு களுதாவளை பிள்ளையார் திருக்கோயில் நிர்வாக சபையினர் தென்னாட்டிற்கு வருகை தந்து வழிபாடு ஆற்றியிருந்தனர்.

(01-09-2024) – கிழக்குப் பல்கலைக்கழக ஆலடி சித்தி விநாயகர் திருக்கோயில் திருப்பணிக் குழுவி- னர் தென்னாட்டிற்கு வருகை தந்து வழிபாடு ஆற்றியி ருந்தனர். தென்னாடு ஐம்பூதநாதர் முன்னிலையில் அவர்களிற்கு கௌரவிப்புச் செய்யும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. மேலும் அவர்களுடன் தமிழ்நாடு திருக்குடந்தை இறைநெறி இமையவன் ஐயா அவர்க ளும் வழிபாட்டில் கலந்து கொண்டார். (01-09-2024) – ஆவணித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடு கள் சிறப்பாக இடம்பெற்றன.

(07-09-2024) – ஆவணித் திங்கள் நான்காம் பிறைநாள் (விநாயகர் சதுர்த்தி) சிறப்பு வழிபாடுகள் சிறப் பாக இடம்பெற்றன. (09-09-2024) – அருட்குருநாதர் ஒளியாகம் ந. ஒளியரசு ஐயா அவர்களினால் தீக்கை வழங்கல் நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் மூன்று அடியார்களிற்கு நுழைவு (சமயம்) தீக்கையும், ஒருவருக்கு நோன்மை (விசேடம்) தீக்கையும் வழங்கி வைக்கப்பட்டது. (12-09-2024) – தென்னாடு சைவ மாணவர் சபையினால், கிழக்குப் பல்கலைக்கழக ஆலடி சித்தி விநாயகர் திருக்கோயிலில் நிறுவப்பட்ட அருள்மிகு கயிலைநாதப் பெருமான் திருக்குட நன்னீ ராட்டுப் பெருவிழா சிறப்பாக இடம்பெற்றிருந்தது. (12-09-2024) – அமரர் திருமதி வசுந்தராதேவி பரமேஸ்வரநாதன் அவர்களின் இறுதிக் கிரியை வழிபாடுகள் தெய்வத் தமிழில் ஆற்றி வைக்கப்பட்டது.

**திருச்சிற்றம்பலம்**

# சைவசமய தீக்கை வழங்கும் திருவருள் விழா



யாழ்ப்பாணம் தீவகம் மண்கும்பான் வெள்ளைப் புற்றடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் திருக்கோயிலில், கடந்த 10-09-2024 அன்று இலங்கை சைவநெறிக் கழகத்தால் சைவசமய தீக்கை வழங்கும் விழா சிறப்புற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் சிவாசாரியார் சிவத்திரு. கிருஷ்ண ஜனேந்திரக் குருக்கள் சைவசமயத் தீக்கைக் குருவாக விளங்கி, திருவருள் துலங்கும் அருள்நிகழ்வாக கிரியைகளை நடத்தியிருந்தார். திருக்கோயில் பரிபாலன சபையினரும், பொது அறிவித்தலை அறிந்து கலந்துகொண்ட சைவப்பெருமக்களும் வருகைதந்து சைவசமய தீக்கையை பெற்றுக்கொண்டனர். மிககுறுகிய முன்னறிவித்தலுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு, திருவருளால் இனிதே நடைபெற்றது.

கலந்துகொண்ட அன்பர் அனைவருக்கும் பஞ்சபாத்திரம், உத்தரணி தட்டம், நாவலர்பெருமான் எழுதியருளிய நித்திய கரும விதி நூல், இல்லங்களில் சிவபூசை செய்வோம் நூல் என்பன சிவாசாரியப்பெருமகனாரின் திருக்கரங்களினால் வழங்கியருளப்பட்டது.

நெடுந்தீவிலும் கடந்த 08-09-2024 அன்று சைவநெறிக் கழகத்தால் தீக்கை வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். முதல்நாள் மாலை நெடுந்தீவில் உள்ள அனைத்து அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்களுக்கு சைவசமய வாழ்வியல் குறித்து, **'சைவசமயமே இன்பநெறி'** என்னும் தலைப்பில் சொற்பொழிவும், அடுத்தநாள் காலை நெடுந்தீவு கிழக்கு 13ஆம் வட்டாரம் அருள்மிகு மனோன்மணி அம்மன் திருக்கோயிலில் தீக்கை வழங்கலும் இடம்பெற்றிருந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் புதிதாக அறநெறிகள் தொடக்கம்







யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதிகளில் சைவத்தை வளர்க்கும் நோக்கில் சிவத்திரு. மகாலிங்கம் மயூரதன் அவர்களின் முன்னெடுப்பில் சைவ அன்பார்கள் பலர் இணைந்து, திருக்கோயில்களை மையப்படுத்தி அறநெறிகளை நிறுவி நடைமுறைப்படுத்தும் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் கடந்த 04-08-2024 அன்று உரும்பிராய்கிழக்கில் சிவ மகேசுவரர் அறநெறி பாடசாலை, ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஞானவைரவர் அறநெறி பாடசாலை ஆகிய அறநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு, அறநெறிகளுக்கான புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து 09-08-2024 அன்று உரும்பிராய் வடக்கு மடத்தடி வைரவர் அறநெறி பாடசாலையும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் தொடங்கப்பட்ட மூன்று அறநெறிப்பாடசாலை மாணவர்களிற்குமான சைவ அறிவுப் போட்டிகளையும் அண்மையில் முன்னெடுத்து, பரிசில்களையும் வழங்கி வைத்துள்ளனர். இப்போட்டியில் 120 மாணவர்கள் பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**திருச்சிற்றம்பலம்**

# பழனியில் முத்தமிழ் முருக மாநாடு – 2024



தமிழ்க் கடவுளான முருகப் பெருமானின் பெருமையை உலகில் உள்ள முருக பக்தர்கள் அறிந்து கொள்ளும் வகையில், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையினால் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு ஒன்றை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. அந்த வகையில் கடந்த ஆகஸ்ட் 24,25ம் தேதிகளில், பழநி பழனியாண்டவர் கல்லூரியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு கோலாகலமாக நடைபெற்றிருந்தது. இம்மாநாட்டிற்கு இந்தியா மட்டுமின்றி வெளிநாடுகளிலிருந்தும் பல பிரமுகர்களும், முருக அடியார்களும் பங்கு பற்றியிருந்தனர்.

மாநாட்டின் முதல் நாள் சென்னை முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி வாயிலாக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரை வழங்கி மாநாட்டை தொடங்கி வைத்தார். தொடர்ந்து இரத்தினகிரி பாலமுருகனடிமை சுவாமிகள், மாநாட்டு இலச்சினை பொறிக்கப்பட்ட கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து, மாநாடு ஆய்வு மலர் வெளியிடப்பட்டது. ஆன்மிக அன்பர்கள், ஆதீனங்கள், நீதிபதிகள், வெளிநாட்டைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு பேசினர்.

மாநாட்டின் இரண்டாவது நாள் ஓதுவார் குழுவினரின் இசை நிகழ்ச்சிகள், இறை வணக்கத்துடன் விழா தொடங்கியது. மாவட்ட ஆட்சியர் பூங்கொடி வரவேற்றார். அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலர் சந்திரமோகன், அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆணையர் ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநாடு விழா மலரை உயர்நீதிமன்ற நீதிபதி ஆர். சுரேஷ்குமார் வெளியிட, கோவை கவுமார மடம் ஆதீனம் குமரகுருபர சுவாமிகள் பெற்றுக் கொண்டார். விழாவில் பல பிரமுகர்கள் உரை வழங்கினார்கள். பின்னர், இசை மற்றும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாலையில் சென்னையில் இருந்தபடி காணொலி வாயிலாக விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

நிறைவு விழாவில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நினைவாக பழநியில் ‘வேல்’ நிறுவுவது, வெளிநாட்டில் வாழும் முருக பக்தர்கள் தமிழகத்திற்கு வருகை தரும் போது திருவிழா மற்றும் சிறப்பு காலங்களில் வழிபாட்டிற்கு உதவும் வகையில் மொபைல் செயலி மூலம் வழிபாட்டு வசதிகள் செய்து தருவது, சித்த மருத்துவத்தை இனி வரும் காலங்களில் ‘தமிழர் சித்த மருத்துவம்’ என அழைக்க அரசுக்கு பரிந்துரைப்பது என்பன உட்பட 21 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மேலும் முருகனின் பெருமைகளை உலகறியும் வகையில் பறைசாற்றிய 16 பேருக்கு போகர் சித்தர் விருது, நக்கீரர் விருது, முருகம்மையார் விருது என்று 16 முருகனடியார்களின் பெயர்களில் விருதுகளும் வழங்கப்பட்டன.

**திருச்சிற்றம்பலம்**

# பவளவிழா காண்கிறார்
# தவத்திரு. கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள்



தொண்டைமனாற்றங்கரையில் செல்வச் சந்நிதியானின் துணைகொண்டு வருடமுழுவதும் இடைவிடாது அடியார்களிற்கு அமுது செய்விக்கும் அளப்பெரும் பணியை ஆற்றிவரும் அண்ணல், தவத்திரு. கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் கடந்த 31-08-2024 சனிக்கிழமை அன்று தனது 75 ஆவது பிறந்தநாளைக் கண்டு மகிழ்கிறார்.

இதனையொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரும் முருகபக்தர்களும் இணைந்து சுவாமிகளுக்கு பவளவிழா நடாத்தி, 'அறம் பாலிக்கும் ஞானமோகனம்' என்ற நூலையும் வெளியீடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் ஆன்மீக தலைவர்கள், தொண்டர்கள், சந்நிதியான் சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், அடியார்கள் என நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வருகைதந்து கலந்து சிறப்பித்திருந்தனர்.

பெரியபுராணம் பேசும் நாயன்மாருள் பலர் அடியார்களுக்கு அமுதூட்டிப் பெருமை பெற்றோர் ஆவர். அவ்வழியில் இன்றும் அடியவரின் பசிப்பிணி போக்குவதே தனது தலையாய கடன் என்று எம் மண்ணில் வாழும் பெருந்தகை, 31-08-1949 இல் வல்வை மண்ணில் பிறந்து, இன்று 75 ஆவது அகவையைக் காணும் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகள் ஆவார்.

செல்வச்சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் வருடத்தின் 365 நாள்களும் மூன்று வேளையும் உணவு வழங்கப்படுகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டு 65 முதியவர்கள் சந்நிதியானே தஞ்சம் என கோயிற் சூழலில் வாழ்கின்றனர். உணவு தவிர காலை மாலை தேநீர் மற்றும் உடுபுடைவைகளையும் ஆச்சிரமம் இவர்களுக்கு வழங்குகின்றது. கடைசி காலத்திற்கு மோகன் மடம் இருக்கிறது என பேச்சு வழக்கில் நம்மவர்கள் கருதுமளவிற்கு ஆச்சிரமத் தொண்டு பரந்து விரிந்திருக்கின்றது.

1985 ஆம் ஆண்டளவில் சந்நிதியான் சூழலில் ஆனந்தா ஆச்சிரமத்தில் தவத்திரு. மயில்வாகனம் சுவாமிகளின் அணுக்கத் தொண்டனாக இருந்த செந்திவேல் மோகனதாஸ் என்ற வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அடியவரே பின்னாள்களில் 1989 இல் சந்நிதியான் ஆச்சிரமத்தை நிறுவி இன்று இலங்கை முழுவதிலும் மதங்கடந்து பணி செய்யும் தொண்டராக தன்னை உருவாக்கிக் கொண்டவர். வாழ்க்கையில் பல சோதனைகளும் திசைமாற்றங்களையும் கடந்துவந்த அடியவர்கள் முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்படுகின்றனர்.

அருணகிரிநாதர் தொடக்கம் பலர் இதற்குச் சாட்சியமாக விளங்குவர். மோகன் சுவாமிகளும் பல சோதனைகளையும் வேதனைகளையும் கடந்து சந்நிதியான் அருளால் இன்று பொதுப்பணி செய்யும் தொண்டராக உயர்ந்து நிற்கிறார். எப்படி இவையெல்லாவற்றையும் ஆற்ற உங்களால் முடிகின்றது எனக் கேட்டால் "நான் எதுவுமே செய்வதில்லை. சந்நிதியான்தான் எல்லாமே செய்கிறான். நான் வெறும் கருவிதான்" எனத் தன்னடக்கமாக பதில் தருவார்.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை 27-09-1992 இல் தொடங்கப்பெற்ற அமைப்பு ஆகும். இது 1993 ஆம் ஆண்டில் இருந்து வெள்ளிக்கிழமை தோறும் வாராந்தம் சைவசமயச் சிறப்பு நிகழ்வுகளை நடத்திக்கொண்டு வருகின்றது. 1998 தொடக்கம் திங்கள் ஒரு முறை 'ஞானச்சுடர்' என்ற பெயரிலான ஆன்மீக சஞ்சிகையை தொடர்ச்சியாக வெளியிடுகின்றது. புத்தகக் கடைகளில் பெற முடியாத ஆச்சிரமத்தில் மாத்திரம் பெறப்படக் கூடிய இச்சஞ்சிகை திங்கள் தோறும் ஆயிரக்கணக்கில் அச்சாகி அடியவர்களைச் சென்றடைவதுவும் சந்நிதியானின் அற்புதமே. இவற்றின் இயக்கசக்தியாக கலாநிதி மோகன் சுவாமி விளங்குகின்றார்.

ஆச்சிரமத்திற்குள் அன்னதானம் வழங்குதல், முதியோருக்கு உதவி வழங்கல், மருத்துவ சேவை வழங்கல், கற்றல் உதவி வழங்கல் என்று அமைந்திருந்த சமூகப் பணிகள் 2014 ஒக்டோபர் 29 இல் ஏற்பட்ட மீரியப்பொத்த மண்சரிவுடன் ஒரு திருப்பத்தைக் கண்டது.

மலையகத்தில்ஏற்பட்டஇத்துன்பகரமானமண்சரிவின் கோரத்தாண்டவத்தை உணர்ந்து கொண்ட சுவாமிகள் பாரவூர்த்திகளுடன் சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவியாக உணவுப் பொருள்களுடன் மீரியப்பொத்தைக்கு நேரடியாகச் சென்று மலையக உறவுகளுக்கு உதவிக் கரம் நீட்டினார். மலையக மண்ணுக்குத் தொடர்ந்து உதவ வேண்டும் எனவும் திடசங்கற்பம் பூண்டார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்வேதமாகிய திருக்குறளில் தமிழர் தத்துவம் சைவசித்தாந்தம்



செந்நெறிச் செல்வர் அமரர் சிவத்திரு.கு.வைத்தியநாதன் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய முதல்வர்

## திருக்குறள் சைவ நூலே என்பதற்கு ஆதாரம்

திருக்குறளின் உட்கிடை யாது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், தக்க உரை நூலின் துணைக் கொண்டே அதை அறியமுடியும். திருக்குறளுக்குப் பத்துப் பேர் உரை எழுதியுள்ளனர். அவ்வுரைகளைப் "பதின்மர் உரை" என்பர். இவ்வுரை ஆசிரியர்கள் அனைவரும் திருவள்ளுவர் காலத்துக்குப் பலநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் தோன்றியவர்கள். அவ் உரைகளுள் சிறந்தது பரிமேலழகர் உரையே என்பது உமாபதி சிவாசாரியார் கருத்து. இதனை,

**"வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே**
**தெள்ளு பரி மேலழகர் செய்தவுரை - ஒள்ளிய சீர்த்**
**தொண்டர் புராணம் தொகு சித்தி ஓர் ஆறும்**
**தண்தமிழின் மேலாம் தரம்"**

என்று அவர் அருளிச்செய்த வெண்பாவால் அறியலாம். இந்த வெண்பாவில், திருவள்ளுவர் செய்த திருக்குறள், மணிவாசகர் செய்த திருவாசகம், தொல்காப்பியம், பரிமேலழகர் உரை, பெரிய புராணர், சிவஞான சித்தியார் என்னும் ஆறு நூல்களையும், தமிழ் மொழியின் தரத்தை உயர்த்தும் நூல்கள் என்று உமாபதி சிவம் கூறுகிறார். எனவே பரிமேலழகர் உரையே, சைவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய உரை என்பது தெளிவாகும்.

பரிமேலழகர் உரையைப் பிரமாணமாகக் கொள்வதற்கு, முதன்மையான காரணம் ஒன்று உள்ளது. பரிமேலழகர் காஞ்சிபுரத்தில் வைணவ மரபில், உலகளந்த பெருமாள் கோயில் அருச்சக பரம்பரையில் பிறந்தவர். ஒரு பட்டாச்சாரியாரின் குமாரர். திருக்குறளுக்கு உரை எழுதும் பொழுது, நடுவுநிலை பிறழாமல் பொருள் எழுதியுள்ளார் என்பதை, ஒன்பதாவது குறளுக்கு அவர் எழுதியுள்ள சிறப்புரையிலிருந்து அறியலாம்.

**'கோளில் பொறியின் குணம் இலவே,**
**எண்குணத்தான் தாளை வணங்காத் தலை"**

என்பது ஒன்பதாவது குறள். இதில் வரும் **"எண்குணத் தான் "** என்னும் சொற்குப் பரிமேலழகர் கீழ்க்காணுமாறு சிறப்பு உரை எழுதியுள்ளார்:

எண் குணங்கள் ஆவன, தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை என இவை இவ்வாறு சைவ ஆகமத்தில் கூறப்பட்டது.

வைணவ மரபில் வந்த ஒருவர், இவ்வாறு வள்ளுவப் பெருந் தகையின் உள்ளக் கிடைக்கையைத் தெள்ளத் தெளிய எடுத்து இயம்பியமையாலேயே, பரிமேலழகர் உரையைப் பிரமாணமாகச் சைவ மரபினர் கொள்ள வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். பரிமேலழகரின் நேர்மைக்கு இந்த சிறப்பு உரை ஓர் எடுத்துக் காட்டு. இன்னும் பலவற்றைப் பின்னர் காணலாம்.

பரிமேலழகர் கி. பி. 1272ல் வாழ்ந்தவர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். உமாபதி சிவாசாரியார் கி.பி. 1313ல் வாழ்ந்தவர் என்பது அவர் அருளிச்செய்த **"சாங்கற்ப நிராகரணம்"** என்னும் சாத்திர நூலின் வாயிலாகப் புலனாகிறது. இந்த இடத்தில் மேலும் ஒன்றைச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. சிவஞானபோதம் அருளிச் செய்த மெய்கண்ட சிவாசாரியார் வாழ்ந்த காலம் கி. பி. 1232. அஃதாவது பரிமேலழகர், மெய்கண்ட சிவாசாரியாருக்கு நாற்பது ஆண்டுகள் பின்பு வாழ்ந்தவர் என்பது தெளிவாகிறது. ஆயினும் உமாபதி சிவாச்சாரியாருக்கு நாற்பத்து ஒன்று ஆண்டுகள் முன்பு வாழ்ந்தவர். எனவே, உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்த "திருவருட்பயன்" என்னும் குறள் வெண்பாவின் "பா அமைப்பில் உள்ள சாத்திரத்தில், திருக்குறளில் வரும் சைவ சித்தாந்தக் குறியீட்டுச் சொற்களையே, உமாபதி சிவாச்சாரியார் பயன் படுத்தி உள்ளார் என்பதைக் காணலாம். அவற்றுள் சில வருமாறு:

**திருக்குறள்**
**இருள் சேர் இருவினை - 5**
**அகர முதல எழுத்து - 1**
**துறந்தார் பெருமை - 22**

**திருவருட்பயன்**
**இருள் இன்றேல் துன்பு ஏன்? - 27**
**அகர உயிர்போல் - 1**
**துறந்தோர் துறப்போர் தொகை - 11**

தமிழ்வேதம் தொடரும்...

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**ஆதிசங்கரர் சண்மதம் நிறுவினார் என்பது உண்மைக் கதையா? சைவசமயத் திருமுறை சாத்திரங்கள் கூறும் அறுசமயம் எவை?**

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

17ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு எழுந்த சுமார்த்தமத சங்கராசாரிய நூல்களாகிய சிருங்கேரி குருவம்ச காவியம், சித்விலாசீய சங்கர விஜயம், குருரத்ன மாலாவின் ஸூஷமா விரிவுரை, ஆனந்தகிரீயம் நூல்களிலேயே, ஆதிசங்கரர் சண்மதம் தாபித்தார் என்னும் இட்டுக்கட்டுக்கதை ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டுப் பரப்பப்படத் தொடங்கியது. அதற்கு முற்பட்ட எந்தவொரு நூல்களிலும் இப்படியொரு போலிக்கதை புழக்கத்தில் இல்லை.

அதிலும், ஆனந்தகீரியம் தவிர்ந்த ஏனைய நூல்களில் அந்த சண்மதங்களும் எவையென்ற தகவல் குறிப்பிடப்படவில்லை. ஆனந்தகீரியத்தில் கௌமார மதம் என்னும் சொற்பதம் இல்லை. அதற்குப்பதிலாக காபாலிகம் என்னும் சிவசமயப்பிரிவே குறிப்பிடப்பட்டுள்ளது. திருநாவுக்கரசு நாயனார் முதலிய சைவ நாயன்மார்களால் ஆதரிக்கப்பட்ட இக்காபாலிக சமயம், இத்தனைக்கும் ஆதிசங்கரால் அவருடைய நூல்களில் கண்டிக்கப்பட்டுள்ளது. சைவசமயம், வைணவசமயம், காணாபத்தியம், சௌரம், சாக்தம், காபாலிகம் என்று குறிப்பிடப்பட்ட இந்த சண்மதத் தொகுப்பில் மெதுவாகக் காபாலிகம் அகற்றப்பட்டு, கௌமாரமதம் என்னும் சொற்பதம் சேர்க்கபட்ட்டு, இந்துமதங்களின் பிரிவுகளாகத் திரிக்கப்பட்டுப் பரப்பப்பட்டவாறுள்ளது. தமிழினத்தை வடக்குத் தமிழர், கிழக்குத்தமிழர், மலையகத் தமிழர் என்று பிரித்தாளுவது எங்ஙனம் ஏனையோருக்கு நன்மையளிக்குமோ, அதுபோன்றேதான் சைவசமயத்தாரை கௌமாரமதம், காணபத்தியமதம் என்றெல்லாம் பிரிக்க நினைப்போர் எதிர்பார்ப்புமாகும். **"சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டி சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி"** என்றுதான் ஔவையார் அருளிய விநாயகர் அகவல் விளங்குகின்றது.

நம்பியாண்டார் நம்பிகள் முதலிய விநாயகர் அடியார் யாவரும் சைவ அருளாளர்களேயாகும். பிள்ளையார் வழிபாடும் தனித்தவொரு மதவழிபாடாக தமிழ் மண்ணில் விளங்கியில்லை. ஒரு இனத்தை ஒழிக்கவேண்டுமென்றால், அந்த இனத்தை சாதிகளாலும் பிரதேசங்களாலும் எதிரிகள் பிரித்தாளுவர். அதுபோல், சைவசமயப்பண்பாட்டை சிதைத்துத் தம்மதத்தைத் தாபிக்க எண்ணிய சுமார்த்தமதத்தார், சுமார்த்தமதகுருவாகிய ஆதிசங்கரரால் உருவாக்கப்பட்ட சண்மதங்களே சைவாதி சமயங்கள் என்றும், சைவத்தில் உள்ள முருகன் பிள்ளையார் வழிபாடுகளைத் தனிமத வழிபாடுகளாகவும் சித்தரித்து ஒழிக்க எடுத்த ஆயுதமே **"ஆதிசங்கர் சண்மதம் தாபித்தார்"** என்ற இட்டுக்கட்டுக்கதையும், அக்கதை வழி இந்துமதம் என்பது காணாபத்திய கௌமார மதங்களின் சேர்க்கையே என்பதுமாகும். சத்தி வழிபாடாகிய வாமநெறியும் தமிழரின் பண்டைய அகராதிகளில் சைவசமயத்தின் அகச்சமயப்பிரிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. பொ.பி 9ம் நூற்றாண்டுக்கு (6-9ம் நூற்றாண்டுக்கு) உரியதாகக் கருதப்படும் திவாகரம் (சேந்தன் திவாகர நிகண்டு) என்னும் நிகண்டில் **"வைசேடிகம், நையாயிகம், மீமாஞ்சை, ஆருகதம்(சமணம்), பௌத்தம், உலோகாயதம்"** என்னும் அறுசமயங்கள் கூறப்பட்டுள்ளன.

இவையாவும் புறச்சமயங்கள் என்பது தெளிவாகும். பொ.பி 10ம் நூற்றாண்டுக்கு உரியதாகக் கருதப்படும் பிங்கல நிகண்டுவில், உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பஞ்சராத்திரம் (வைணவம்), பட்டாசாரியம் ஆறும் புறச்சமயம் என்றும், வைரவம், வாமம், காளாமுகம்(காபாலிகம்), மாவிரதம், பாசுபதம், சைவம் என்னும் ஆறும் அகச்சமயம் என்றும் கூறப்பட்டுள்ளன. பொ.பி 16ம் நூற்றாண்டுக்கு உரியதாகக் கருதப்படும் சூடாமணி நிகண்டுவில், உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பஞ்சராத்திரம் (வைணவம்), மாயாவாதம் (சுமார்த்தமதம்) ஆறும் புறச்சமயம் என்றும், வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்னும் ஆறும் அகச்சமயம் என்றும் கூறப்பட்டுள்ளன.

சுமார்த்தமதத்தின் ஆரம்பகால வடிவமே மீமாஞ்சை மதமாகும். எனவே, சைவ நூல்களில் உள்ள அறுசமயம் என்பது தமிழர் நிகண்டுகளில் உள்ள வழக்குப்படி அகம் புறம் என்று இரு வகுப்பாய் நிற்கும் என்றும், அதில் புறச்சமய அறுசமயங்களில் ஒன்றே ஆதிசங்கரரின் சுமார்த்த மாயாவாத ஏகான்மவாத மதமாகும் என்பதும், அம்மதத் தலைவரான ஆதிசங்கரர் சைவாதி சமயங்களை அறுசமயங்களாக வகுத்தார் என்பதெல்லாம் சைவசமயத்தை ஒழிப்பதற்கு அம்மதத்தார் உருவாக்கியப் போலிக்கதைகள் என்றும், சைவசமயத்தார் தெளிந்து உயர்தல் கடன். திருமுறைகள் போற்றும் அறுசமயம் என்பது தமிழர் நிகண்டுகளில் உள்ள அகச்சமயங்களே என்றும், திருமுறைகள் நிராகரிக்கும் அறுசமயம் என்பது தமிழர் நிகண்டுகளில் உள்ள புறச்சமயங்களே என்றும் தெளிந்து, இக்கால இட்டுக்கட்டுக் கதைகளைத் தமிழரிடம் இருந்து அகற்றுதல் சான்றோர் கடன். இந்தியசமயங்கள் சைவசமயம், வைணவசமயம், சுமார்த்தமதம், சமணமதம், பௌத்தமதம், சீக்கியமதம் என்று வழங்கப்படுவதே ஏற்புடையதும் இந்திய அரசியல் சாசனம் முதலியவற்றுக்குப் பொருத்தமானதுமாகும்.

அதனைவிடுத்து இந்துவென்ற பெயரில் இல்லாத கௌமாரமதம் முதலிய சொற்பதங்களைத் திணிப்பதும், தனிமதமாகவும் சைவசமயம் வைணவசமயம் முதலிய சமயங்கள் யாவற்றுக்கும் புறச்சமயமாகவும் விளங்கும் ஏகான்மவாத சுமார்த்தமதத்தின் பெயரைப் பொதுமக்கள் அறியாவண்ணம் மறைப்பதும் சைவசமயத்தை ஏகான்மவாத சுமார்த்தமதத்தினுள் ஒடுக்கும் சதியின் வெளிப்பாடேயாகும். இதனை முறியடிப்பது சைவசமயத்தார் கடனாகும்!

**திருச்சிற்றம்பலம்**



# சிவபூமியில் சிவனைத் தேடி

## தேரோடும் தேசத்து சிவன் கோயில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர்

கிழக்கிலங்கையில் புகழ்பூத்த சிவன் கோயில்களுள் பழமையும். பாரம்பரியச் சிறப்புக்களையும், தேசத்து வட்டாரச் சட்டதிட்டங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரமாகும்.

**“மோட்டெருமை வெண்டயிரும் முப்பழமுங் கற்கண்டும் போட்டிணிய சீனி தேன் பொருந்து செந்நெல் வெண் சோற்றைக் கூட்டி யொன்றாய்க் குழைத்து”**

என்று புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பாடுமாற் போல் பாலும் தயிரும், தேனும், மும்பழமும், காடும், வயலும் செழித்த வளங்களோடு விளங்கும் மட்டு நகருக்கு தெற்கே அமைந்துள்ள மண்முனைப் பிரதேசத்தில் வளம் பெற்ற பழம்பதியான கொக்கட்டிச் சோலை தனில் சிவனார் சுயம்புலிங்கமாக எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகின்றார்.

### திருத்தல வரலாறு

இத்திருத்தலத்தின் தோற்றம் தொடர்பாக பல செவ்வழி மரபுக் கதைகளும், மகாவம்சம், மட்டக்களப்பு மான்மியம் போன்ற சரித்திர புத்தகங்களும், கல்வெட்டுப் பாடல்களும் ஆதாரங்கள் பல செப்புகின்றன. அவைகள் மேல்வருமாறு

**(அ) திருவேட்டைக் காவியம் கூறும் வரலாறு**

இக் கோயிலில் படிக்கப்படும் திருவேட்டைக் காவியத்தில் இக்கோயில் வரலாறு கொக்கட்டியார் மரபோடு தொடர்பு படுத்திக் கூறப்பட்டுள்ளது. அதில் “கதிரமலையை வணங்க இந்தியாவில் இருந்து வருகை தந்த முத்துலிங்கர், கொக்கட்டியர் எனும் இரு தபோதனரில் கொக்கட்டியர் தற்போது கோயில் இருக்கும் இடத்தில் சமாதி அடைய, முத்துலிங்கர் அவரை சமாதியிருத்தி கதிரமலையை வணங்கச் சென்றதாகவும், பின்பு அச்சமாதியிலிருந்து ஒரு இலிங்கம் உண்டாகி கொக்கு நெட்டிமரமொன்றினால் மறைக்கப்பட்டிருந்ததாகவும் பின்பு தேன் தேடச் சென்ற வேடன் அம்மரத்தை வெட்ட உதிரம் பாய்ந்ததாகவும், இக்காட்சியை சொப்பனத்தில் காட்சி பெற்ற செட்டியார் எனும் கதிர்காம யாத்திரிகரால் கோயில் திருப்பணிகள் புரிந்து கொக்கட்டிச் சோலை தான் தோன்றீசுவரம் என்று அழைத்ததாகவும் கூறப்படுகிறது.”



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

**(ஆ) உலக நாச்சி எனும் கலிங்க அரசியால் அமைத்த கோயில்.**

மகாவம்சம், மட்டக்களப்பு மான்மியம் போன்ற சரித்திர நூல்களின் தகவல்களின்படி உலகநாச்சி என்னும் அரசியால் அமைக்கப்பட்ட கோயிலே கொக்கட்டிச் சோலைப்பதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. “கலி பிறந்து 3500ம் வருடம் மட்டக்களப்பில் ஆட்சிக்கு வந்த குணசிங்கன் காலத்தில் கலிங்க ஒரிசா தேசத்திலிருந்து உலகநாச்சி என்பவள் புத்தரின் சின்னத்தையும் முன்னோர்கள் கைலாயத்தில் போற்றிப் பேணிய சிவலிங்கத்தையும் கொண்டு தன் சகோதரன் உலகநாதனுடன் இலங்கை வந்தாள். பின் மேகவர்ணனிடம் புத்த சின்னத்தைக் கொடுத்து, தனக்கு குடிகளற்ற காட்டுப் பிரதேசமொன்றை அன்பளிப்பாகக் கேட்க, அதற்கு மேகவர்ணன் மட்டக்களப்பு அதிபதியாகிய குணசிங்கனுக்கு திருமுகம் எழுதிக்



கொடுத்து அனுப்பி வைத்தான். அதன் பிரகாரம் குணசிங்கனும் மண்முனையை நிறுத்தமாகக் கொடுத்து அங்கு குடிகளையும் இருத்தி, அரசி உறைவதற்கு மாளிகை ஒன்றையும் உருவாக்கிக் கொடுத்தான். பின் உலகநாச்சி இந்தியாவிலிருந்து 106 குகக்குடும்பங்களையும், 30 சிறைக்குடும்பங்களையும் வரவழைத்து குடியமர்த்தினாள். இவ் வேளையில் திகடன் என்னும் வேடர் தலைவன் களப்பு முனைக் காட்டில் தென்புறத்தில் காடுவெட்டும் போது கொக்கு நெட்டி மரத்தை வெட்ட அம்மரத்திலிருந்து உதிரம் பெருகியது. அதனைக் கண்ணுற்ற வேடன் மரவெட்டிவாயை துணியால் கட்டிய பின் இச் செய்தியை உலக நாச்சிக்குத் தெரிவித்தான். உலகநாயகியும் விரைந்து சென்று பார்த்த போது அம் மரத்தில் சிவலிங்கம் ஒன்று உறைந்திருப்பது கண்டு ஆச்சரியமுற்று அவ்விடத்தில் காடகற்றி துப்பரவு செய்து கோயில் கட்டினாள்." இச் செய்தி மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளது.

இச் செய்தி ஆதியில் மரங்களை வழிபட்ட மக்கள் பின்னர் மரத்தின் அடியில் தெய்வம் உறைவதாக நினைத்து அம்மர அடிப்பகுதியை வழிபட்டனர் இதுவே கொடிநிலை, கந்தளி, வள்ளி என்ற மூன்று வகை வழிபாடு என்று பழந்தமிழ் நூலான தொல்காப்பியம் பறைசாற்றும் . கொக்கட்டி மரத்தின் அடியில் தோன்றிய சிவலிங்கமும் ஆதிவணக்க முறையின் எச்சமாக உணர்ந்தால், இக்கோயிலின் பழமையும் தொன்மையும் எமக்கு புலப்படும்.

**(இ) பொலநறுவையில் அரசனாக இருந்த சேனன் என்பவனால் பாண்டிய நாட்டிற்கு அனுப்பப்பட்ட படையின் தளபதியும், மட்டக்களப்பின் நிதியதிபனுமாகிய தருமசிங்கனால் கட்டப்பட்டது என்ற செய்தி மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இதற்குத் தகுந்தால் போல் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீசுவர ஆரம்பக் கோயில் கட்டட அமைப்பான கருவறை, அந்தராளம் (இடைகழி), அர்த்த மண்டபம் என்னும் பகுதிகள் பாண்டியர் காலத்திற்குரியது என பேராசிரியர் கா.இந்திரபாலா என்பவர் இனங்கண்டுள்ளார்.

**(ஈ) கிழக்கிலங்கையில் சோழர்களின் ஆதிக்கம் பரவிய காலத்திலும் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீசுவரக் கோயில் செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளது.**

கி.பி 1223 இல் ஈழத்திற்கு வந்த சோழகங்கனே கோணேசர் கல்வெட்டுக் கூறும் குளக்கோட்டன் என்று ஐயுறும் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள். குளக்கோட்டனது திருச்சேவையைப் பெற்ற ஈழ தேசத்துக் கோயில்களில் திருக்கோணேச்சரத்திற்கு அடுத்து சிறப்பு பெற்ற சிவன் கோயில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீசுவரம் என்று மேல்வரும் ஒரு கல்வெட்டுப் பாடல் மூலமாகத் தெரிவிக்கின்றார்.

**"சீர் மேவு இலங்கைப்பதி வாழ்வுதரு**
**செல்வமும் சிவநேச இரு சமயமும்**
**செப்புதற் கரிதான மாணிக்க கெங்கையும்**
**செக மேவு கதிரமலையும்**
**ஏர் பெறும் தென்கயிலை வாழ் கோணலிங்கம்**
**மேன்மை தான் தோன்றுலிங்கம்**
**வெற்றி புனை மயூர சித்திர சங்காரவேல்**
**வெள்ளை நாவற் பதிய தாம்**
**பேர் பெறும் தென் திருக்கோயில்**
**சிவாலயம் சிவபூசை தேவாரமும்**
**செய் முறைகள் என்றென்றும் நீடூழி காலமும்**
**தேசம் தளம்பாமலும்."**

**சுயம்புலிங்க மூர்த்தியின் சிறப்பு**

இக்கோயிலின் மூலவர் தானே தோன்றிய சுயம்பு இலிங்க வடிவில் கோயில் கொண்டு அடியவர்களுக்கு அருள் சொரிந்து வருகின்றார். பொதுவாக இலிங்க வகைகளுக்குள்ளே தனிச் சிறப்பும் மகிமையும் கொண்டது சுயம்பு இலிங்கமாகும். இது யாராலும் உருவாக்கப்படாமல் தானாகவே ஒப்பற்ற கருணை வடிவமாக அவ்வப்போது தோன்றும் இலிங்கமாகும். இச் சிவலிங்கம் சிதைவுறுகினும் கூட நிலைப்படுத்தல் முதலிய கிரியைகள் இன்றியே மீண்டும் வழிபடத்தக்க பெருமை பெற்றது. இச் சுயம்பு இலிங்கங்களின் மூலம் சைவர்களின் புனித தலமான காசி என்று கூறுவர். அந்த வகையில் ஈழத்தின் காசிநாதராகவும், சுயம்பு நாதராகவும், தான் தோன்றுமப்பராகவும் மட்டு தேசத்தில் அருள் புரிந்து வருகின்றார் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர்.

இத் தான்தோன்றீசுவரின் அற்புதத்தால் போர்த்துக்கீச படைத் தளபதியின் முன்னிலையில் பூசகர் கொடுத்த புல்லை கல் நந்தி உயிர் கொண்டெழுந்து உண்டு சாணம் போட்டு மீண்டு கல் நந்தியான அற்புதத்தால் கோயிலை இடித்தழியாது தன்குதிரைப் படைகளுடன் வடக்குவாசலால் தப்பியோடியதும், வடக்கு மதில் சுவர் இடிந்து வீழ்ந்த சம்பவமும் இம் மூர்த்தியின் கீர்த்தியைப் பறை சாற்றுகின்றது.

இத்தலத்தில் மூல இலிங்கம் வெளியே தென்படாதபடி பீடத்தின் மேலே உமாமகேசுவரர் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது. தீர்த்தம் கோயிலின் அருகாமையிலுள்ள திருக்கேணி, தலமரம் கொக்கு நெட்டி ஆகும்

மண்டூர் புலவர் மணி ஏ.பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் பாடிய தான் தோன்றுமீசர் திருப்பதிகம் என்னும் பாடல்களில், மூர்த்தியின் சிறப்புக்களை மேல்வருமாறு சிறப்பாக எடுத்தோதியுள்ளார்.

**"திருவருள் நிலையென நாத்திகரும்**
**தெளிந்துண்மை கண்டுனைத் தொழுதெழவே**
**திரு முன்னர் நின்ற கல் ஆனேறும்**
**தின்று புல் அசை போடச் செய்பரனே**
**ஒரு முதலே எல்லா மதங்களுக்கும்**
**ஒளி தரும் எங்கள் தான்தோன்றியப்பா**
**திரு நிறை தேவியும் நீயுமெங்கள்**
**சிறு குடில் தொறு மெழுந்தாண்டருளே"**

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

**சுந்தரர் புராணத் தொடக்கம்**

இப்பெரியபுராணக் காவியத்தின் தலைவரே சுந்தரர் தான். இவர் வரலாறே திருமலைச்சருக்கம் தொடங்கி, தடுத்தாட்கொண்ட புராணம் வரை முதல் பகுதியாகவும், ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தில் குண்டையூரில் நெல் பெற்றது முதலாக ஏயர்கோனுடன் நட்பு, மேலும் கழறிற்றறிவாராகிய சேரமான் பெருமாளின் நட்புவரை இடைப்பகுதியாகவும், வெள்ளானைச் சருக்கம் நிறைவுப் பகுதியாகவும் அமைந்துள்ள முறை ஒரு காப்பியத்திற்கு வேண்டிய அனைத்துப் பகுதிகளுடனும் அமைந்து அணி செய்கிறது.

**மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்**
**தீதிலாத் திருத் தொண்டத் தொகைதரப்**
**போதுவார் அவர் மேல்மனம் போக்கிடக்**
**காதல் மாதருங் காட்சியிற் கண்ணினார்.**

(தி.12 சரு.1-1 பா.25)

**பெரிய புராணத்தில் சுந்தரர் வரலாறு இடம்பெறும் பகுதிகள்**

வன்தொண்டரின் திருப்பெயர் கொண்ட ஒரு தனிப் பகுதி என்பதில்லாமல், பின்வரும் ஏழு பிரதானப் பகுதி களில் தம்பிரான் தோழரின் வரலாற்றினைத் தெய்வச் சேக்கிழார் விவரித்துப் போற்றுகின்றார்.

**திருமலைச் சருக்கம்:**

நம்பியாரூரர் தோற்ற நோக்கத்தில் தொடங்கி, திரு மண நிகழ்வில் தடுத்தாட்கொள்ளப் பெறுதல் திருவதிகை யில் திருவடி தீட்சை, சிதம்பர அருள்வழிபாடு சீர்காழி எல்லையில் எம்பெருமான் அருட்காட்சி திருவாரூரில் தம்பிரான் தோழராதல் பரவையாருடனான திருமணம் ஆகிய நிகழ்வுகளில் பயணித்துப் பின்னர் தேவாசிரியன் மண்டபத்தில் திருத்தொண்டர் தொகையினை அருளிச் செய்யும் நிகழ்வு வரையில் இப்பகுதி விவரிக்கின்றது.

**விறன்மிண்ட நாயனார் புராணம்:**

விறன்மிண்டனார் சுந்தரரின் மீது முனிவு கொள்ளுதல் பின்னர் வன்தொண்டர் அருளிச் செய்த திருத்தொண் டர் தொகையினைச் செவிமடுத்து அகமிகக் குளிர்ந்து

வன்தொண்டரை வாழ்த்துதல் முதலிய அரிய நிகழ்வுகள் (11 திருப்பாடல்களைக் கொண்ட) இப்புராணத்தில் மட்டுமே பேசப் பெறுகின்றது.

**சோமாசி மாற நாயனார் புராணம்:**

சோமாசி மாற நாயனார் சுந்தரருடன் பெருநட்பு பேணிய அரியதொரு குறிப்பு (6 திருப்பாடல்களைக் கொண்ட) இப்பகுதியில் மட்டுமே பேசப் பெறுகின்றது.

**ஏயர்கோன் கலிக்காமர் புராணம்:**

குண்டையூரிலுள்ள நெல்மலைகளைச் சிவகணங்கள் திருவாரூரில் சேர்ப்பிக்கும் நிகழ்வில் துவங்கி, புகலூரில் பொன் பெறுதல் முதுகுன்ற ஆற்றிலிட்டுத் திருவாரூர் குளத்தில் பொன்னை எடுத்தல் இருவேறு தலங்களில் இறைவரால் பசி நீங்கப் பெறுதல் ஒற்றியூரில் சங்கிலியாருடன் திருமணம் கண் பார்வை மறைதல் காஞ்சி மற்றும் திருவாரூரில் இழந்த கண் பார்வையைப் பெற்று மகிழ்தல் பரவையாரிடம் சிவபெருமான் தூது கலிக்காம நாயனார் முனிவு கொண்டு பின்னர் நட்பு பாராட்டுதல் கலிக்காமருடன் திருப்புன்கூர் தல வழிபாடு முதலிய பிரதான நிகழ்வுகள் இப்பகுதியில் பேசப்பெறுகின்றன.

**சேரமான் பெருமாள் நாயனார் புராணம்:**

சேரமான் பெருமாள் நாயனார் அறிமுகப் படலத்தில் துவங்கி, சேரனாருக்கு இறைவர் சுந்தரரை அறிவித்தல் சேரர்கோன் சுந்தரரோடு நட்பு பாராட்டுதல் சுந்தரரோடு திருத்தல யாத்திரை வன்தொண்டர் சேரனாருடன் அஞ்சைக்களம் செல்லுதல் அஞ்சைக்கள வழிபாடு திருவாரூருக்கு மீள வருதல் திருமுருகன்பூண்டியில் வேடர் பரி நிகழ்வு முதலிய பிரதான நிகழ்வுகளை இப்பகுதி விவரிக்கின்றது.

**பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம்:**

சுந்தரரின் சமகாலத்து நாயனார். ‘வன்தொண்டரை அகக் கண்களால் மட்டுமே கண்டு வழிபட்டு அவரைத் தம் ஞானகுருவெனக் கொண்டு போற்றி, தம்பிரான் தோழருக்கு ஒரு நாள் முன்னரே திருக்கயிலை ஏகிய’ அற்புத நிகழ்வு இப்புராணத்தில் மட்டுமே பேசப் பெறுகின்றது.

**வெள்ளானைச் சருக்கம்:**

சுந்தரர் இரண்டாம் அஞ்சைக்கள யாத்திரையில் துவங்கி, முதலை வாயினின்றும் மாண்ட பிள்ளையை மீண்டெழச் செய்தல் சேரர்கோன் அரண்மையில் தங்கியிருத்தல் மானிட வாழ்க்கை நிறைவிற்காக இறைவரிடம் விண்ணப்பித்தல் வெள்ளை யானையில் திருக்கயிலை யாத்திரை சேரர்கோனுடன் திருக்கயிலைப் பதம் பெற்று மகிழ்தல் ஆகிய பிரதான நிகழ்வுகள் இப்பகுதியில் விவரிக்கப் பெறுகின்றன.

**திருத்தொண்டர் புராணத் தோற்றம் :**

திருக்கயிலை மலைச்சாரலிலே, வியாக்கிரபாத முனிவரின் குமாரரான உபமன்யு முனிவர், சில முனிவர்களுக்கு ஞானோபதேசம் செய்து கொண்டிருந்தார். அப்போது வான வெளியில் ஒரு சோதி தோன்றியது. அதைக் கை கூப்பி வணங்கினார், உபமன்யு முனிவர்.



இவர் சிவபிரானையன்றி வேறு எவரையும் வணங்கா
தவர். எனவே முனிவர்கள் உபமன்யுவைப் பார்த்து,

**“சம்பு வின்அடித் தாமரைப் போதலால்”**

(தி.12 சரு.1-1 பா.19)

வேறு யாரையும் இறைஞ்சாத தேவரீர், இச்சோ-தியை வணங்கிய காரணம் என்ன? என்று கேட்டனர்.

**“தம்பி ரானைத்தன் உள்ளம் தழீஇயவன்**
**நம்பி ஆரூரன் நாம்தொழும் தன்மையான்”**

(தி.12 சரு.1-1 பா.29)

என உபமன்யு சொன்னார்.

அப்படியானால் அவரது வரலாற்றைக் கேட்க, பெரி-தும் விரும்புகிறோம் என்றனர் முனிவர்கள். உபமன்னியு முனிவரும் அவர்கள் கேட்ட வர லாற்றை உள்ளவாறு அருளிச் செய்வாராய், பெருக்குடைய கங்கை நீரைத் தாங்கிய சடையை உடைய மெய்ப்பொருளாய சிவ-பெருமான், தம் திருவுடம்பில் அணிதற்குரிய, தேன் பொருந்திய மலர்களால் தொடுத்த திருமாலையையும், அணிதற்குரிய திருவிரலால் அள்ளு கின்ற திருவெண்ணீற்றினையும் எடுத்துக் கொடுக்கும் திருத்தொண்டர் ஒருவர் இருந்து வந்தார்.

**“அன்னவன் பெயர் ஆலால சுந்தரன்”**

(தி.12 சரு.1-1 பா.32)


என்று சுந்தர் வரலாற்றை எடுத்தியம்ப ஆரம்பித்தார்.

**தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்**
**திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்**
**இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்**
**இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்**
**வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்**
**விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்**
**கடியேன்அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்**
**ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.** (7.39.1)

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# திருவாசகத் தெளிவு -
# அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய்



**"வலம் வந்த மடவார்கள் நடமாட, முழவதிர மழை யென்றஞ்சிச் சில மந்தியலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே"** என்கின்றார் திருஞானசம்பந்தர்.

பாடலில் திருவையாற்றின் திருக்காட்சி எம் மனம் முன்னே விரிகின்றது. திருக்கோயிலில், நடனத்திற்கு ஏற்ப முழவு எனும் தோலிசைக் கருவியின் ஒலி எழுகின்றது. அது இடியோசை போல் இருந்ததனால் அங்கிருந்த ஒருசில குரங்குகள் மரங்களில் தாவி மழைவருகின்றதா எனப் பார்க்கின்றன. ஏன் சில குரங்குகள் மட்டும் இச் செயலை செய்கின்றன? மிகுதிக் குரங்குகள் அங்ஙனம் மரம் ஏறி முகில் பார்க்கவில்லையே? என்ற கேள்வி எம்முள் எழலாம். அதற்க ஒரு பதில் உண்டு. மரம் தாவி முகில் பார்த்த குரங்குகள் எல்லாம் திருவையாற்றுக்குப் புதிதாக வந்த குரங்குகள். திருவையாற்றிலேயே வாழும் குரங்குகள் கோயில் நடைமுறையை அறிந்ததனாலும், ஆடலில் எழும் ஓசைகளையும் எப்போதும் கேட்பத னாலும் அது அவற்றுக்குப் புதிதாகவும் இல்லை. இடியோசை போன்றும் கேட்கவில்லை. எப்போதும் கோயில் சூழலில் இருப்பதனால் அவை அத் தெளிவைப் பெற்றிருந்தன.

இவ்வாறே, **"பஞ்சரம் கொந்து கிளி வந்து வந்து ஐந்துகரப் பண்டிதன் தம்பி எனும் வயலூரா"** என்று பாடுகிறார் அருணகிரிநாதர். அதாவது பேசும் ஆற்றல் வாய்த்த கிளியினங்கள், அவை எப்போதும் வயலூ ரிலேயே இருப்பவை. அவை முருகனின் பெயரைப் பேசிப் பறக்கின்றன எனத் துணியலாம்.

ஐந்தறிவு வாய்க்கப் பெற்ற உயிர்களே இறைவனின் சூழலில் எப்போதும் நீங்காதிருப்பதனால், தெளிவும், இறை நேசமும் பெறுகின்றன எனில் ஆறறிவுடைய நாம் என்ன செய்ய வேண்டும்? இறை அடியார்களோடு எப்போதும் இணைந்திருக்க வேண்டும். இதனையே மாணிக்கவாசகப் பெருமான், கோயில் மூத்த திருப்ப-திகத்தில்,

**"அடியேன் உன் அடியார் நடுவுளிருக்கும்
அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம் முடியா முதலே"**

எனப்பாடுகின்றார். இறைவன் அடியார் அன்பினுள் அடங்கி இருப்பவன். அவன் அருளைப் பெற அடியார் கூட்டத்தில் நம்மை இணைத்தாலே போதும் என்பது மாணிக்கவாசகரின் கருத்து. அடியார் நடுவுள் அவர் இருப்பதையே இறைவன் எண்ணிப் பாடுகின்றாரே? உண்மையில் அதுவே அருளாகும். பணம், பதவி, மனைவி, மக்கள், புகழ், அதிகாரம் என்பவற்றுக்குள் நடுவுள் இருப்பதையே எப்போதும் நாம் அருள் என எண்ணி வேண்டுகின்றோம். உண்மையில் நிலையில் லாத் தன்மை பெற்ற அடியார் அன்பின் நடுவே இருக் கப்பெற்று இறைவனைச் சேர்வது அருளாகுமா? பெரும் பேறு அடியார் நடுவுள் இருக்கும் தகமை வாய்க் கப்பெறுவதன்றோ! அங்கனம் அடியவர் கூட்டத்தில் புதிதாய் சேரும் போது மணிவாசகர் தங்கிக் கொள்கின் றார். பழைய அடியவர்கள் மத்தியில் தாமும் சேரும் போது தன் குற்றங்களைக் களைய வேண்டுகின்றார்.

**"பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ?"**
என்கிறார்.

அடியார் நடுவுள் இருப்பதனால் புறப்பொருள் எல்லாம் அற்பமெனத் தோன்ற எம்முள்ளும் எமக்குப் பறமாகவும் அத்துவிதமாய், ஒன்றாய் உடனாய் வேறாய் நிற்கும் இறைப் பொருளே பெரிதெனும் மன நிலை இயல்பாகவே தோன்றும். இதனையே வள்ளுவப் பெருமான்

**"அரியவற்றுளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"** என்கிறார்.

எனவே பெரிய அன்புக்கு உரிய அடியாரைப் பேணி நாமும் அவருடன் இருக்கும்படியருள பொன்னம்பல-த்துள் ஆடும் இறைவனை வேண்டுவோமாக!

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. சிவ செந்தமிழாதன்
இளம்புலவர் - தென்னாடு
(முதுமாணி - சைவசித்தாந்தம்)**





# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.   www.thennadu.org



**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் - கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org

# தீக்கை பெறுவோம்!

சைவசமயம் கட்டுப்பாடுகள் அற்றது. நாம் விரும்பிய வழியில் இறைவனை வணங்க இங்கு தடை ஏதும் இல்லை. அதே சமயம் சைவம் சீரிய ஒழுக்கவியல்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கட்டுப்பாடற்ற தன்மையும் அதே நேரம் அந்த சுதந்திரத்துக்குள் ஒழுங்கமைக்கப்பெற்ற கட்டுப்பாடுகளும் என்று இந்த நெறி ஒரு வாழும் நெறியாக மிளிர்கின்றது. எனவே நாம் எமக்கு தரப்பட்ட சுதந்திரத்தோடு சைவசமய ஆசாரங்களையும் பின்பற்றி ஒழுக வேண்டியது அவசியமாகிறது. முதலில் எல்லோரும் சமய தீக்கை பெற்றிருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

சைவர்கள் சிவதீக்கையே பெறவேண்டும். நான்கு வயதிலிருந்து ஏழு வயதிற்குள்ளாகத் தீக்கை பெறவேண்டும் என்று நம்முன்னோர் வகுத்து வைத்துள்ளனர். எனினும் அக்காலத்தில் தடைகளோ அல்லது சந்தர்ப்பமோ அமையாது போனால் பின்னரும் பெற்றுக்கொள்வதில் தடை இல்லை. பிள்ளைகளும் தாங்களும் தீக்கைப் பெற்றிருப்பதை உறுதி செய்வது பொறுப்புள்ள சைவர்களின் இன்றியமையாத கடமையாகும். தீக்கைப் பெற்ற பின்பு அதன்படியாகப் பிள்ளைகள் ஆசாரத்தை பின்பற்றுகின்றார்களா என்று கண்காணிக்க வேண்டியதும் பெற்றோர்களின் கடமையாகும். அதற்குப் பெற்றோர்கள் முதலில் எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும். தீக்கையில் சிவநெறி ஆசிரியர் சைவர்களுக்குறிய மூல மந்திரமான, "**நமசிவய**" என்கின்ற திருவைந்தெழுத்தையும், சிவனின் உருவத் திருமேனிக்கும் அருவுருவத்திருமேனிக்கும் பூசனை செய்கின்றபோது செய்ய வேண்டிய செயல் முறைகளையும் பூசனை அல்லது நோன்பு செய்ய இருக்கின்ற இறைவன் திருமேனியை எப்படிச் சிவமாகவே எண்ணுவது என்கின்ற பாவனை பற்றிய அறிவினையும் போதிப்பார். நித்திய பூசை செய்ய எம்மை அது தூண்டும்.

தமிழ்ச் சைவநெறியைச் சார்ந்தவர்கள் தமிழ்வேதமான திமுறைகளை ஓதி, "**நமசிவய**" என்ற திருவைந்தெழுத்தினைச் சிவநெறி ஆசிரியரிடமிருந்து கேட்டும் சொல்லியும் தீக்கை பெற வேண்டும் என்பதனைப் பெரிய புராணத்தில் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். திருஞானசம்பந்தர் வரலாற்றில், அவருக்கு வைதீக முறைப்படி உபநயனம் செய்ய வேதியர்கள் முயல்கின்றனர். ஆனால் தமிழ்ஞான சம்பந்தர் அவர்களை நிறுத்தி, அவர்களுக்கு வேத மந்திரங்களையெல்லாம் ஓதிக்காட்டி, அதில் அவர்களுக்குள்ள ஐயங்களையெல்லாம் போக்கி, அவர்கள் அறியாமையை நீக்கி, மந்திரங்களுக்கு எல்லாம் முதலாய் இருப்பது, "**நமசிவய**" எனும் திருவைந்தெழுத்தே என்பதனை, "**செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே**" என்று பதிகம் பாடி உணர்த்தினார். எனவே சைவர்கள் சைவ முறைப்படியே தீக்கைப் பெற வேண்டும் என்பது சைவர்கள் அறியவேண்டியது ஆகும்.

சமைந்து அல்லது பக்குவமுற்று இருக்கின்ற ஞானிகளுக்கும் மெய்யடியார்களுக்கும் சீவன்முத்தர்கள் என்ற நாயன்மார்களுக்கும் இறைவனே மனிதரைப் போன்று வேடம் தாங்கி வந்தோ அல்லது தன் திருக்காட்சியினை அருளியோ, அல்லது அறிவுக்கறிவாய் நின்று உணர்த்தியோ தீக்கை அளித்திருக்கிறான் என்று அடியார் பெருமக்கள் வரலாறுகள் கூறுகின்றன. நம் போன்ற சராசரி மானுடர்களுக்கு உண்மையான சைவநெறி ஆசான்கள் தீக்கை அளிப்பர். அதையும் இறைவனே நமக்குக் கூட்டுவிப்பான் என்று சைவ மெய்கண்ட நூல்கள் குறிப்பிடுகின்றன. வாழ்வியல் நெறியாகிய சித்தாந்த சைவம், இறைவனிடத்தில் உறவையும் உணர்வையும் வரவழைக்க நோன்பு நெறியாகிய கிரியையில் இல்ல வழிப்பாட்டினையும் அகப்பூசனையையும் பற்றிக்கூறும் போது தீக்கையை வலியுறுத்துகிறது.

படி நிலைகளில் பல்வேறு தீக்கைகள் இருப்பினும் சைவ சமயத்தவர்கள் அனைவரும் நுழைவுத் தீக்கையாகிய சமயதீக்கை பெற்று உய்ய வேண்டும். இங்ஙனம் விரும்புபவர்கள் தெய்வத்தமிழில் தீக்கை பெறுவதற்கு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தை நாடி நன்மை பெறுவீர்களாக!

**திருச்சிற்றம்பலம்**




# செல்வச்சந்நிதியுறை அருள்மிகு சந்நிதியானும் சித்தர்களும்

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

## செல்வச்சந்நிதி மடங்கள்

வேலுப்பிள்ளை முருகேசு என்ற இயற்பெயரைக் கொண்டவர் முருகேசு சுவாமிகள். 23.05.1920 இல் தும்பளையில் பிறந்தார். தீராத நோயால் பீடிக்கப்பட்டு முருகன் திருவருளால் நோய் நீங்கப் பெற்றார். அன்றிலிருந்து முருகன் அடியவரானார். 1990 ஆம் ஆண்டு முதல் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சகல செயற்பாடுகளிலும் முன்னின்றவர். காசிக்குச் சென்று தனக்குத்தானே சகல கிரியைகளும் செய்து பூரணக் கிரியைக்குரியவராகத் திரும்பினார். இவர் 16.03.1997 இல் மறைந்தார். மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியபோது முருகேசு சுவாமிகள் தனது தொண்டர்களின் துணையுடன் பங்குனி மாதம் சந்நிதியானின் திருக்குட நன்னீராட்டை செய்து முடித்தவர். அவர் சமாதியடைந்ததும் பங்குனி மாதம் தான். அவருடைய நினைவுநாள் அவரது அடியவர்களாலும் தொண்டர்களாலும் வருடந்தோறும் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சடைவரத சுவாமிகள் 1950 - 60களில் சந்நிதியில் வாழ்ந்த சித்தர்களில் ஒருவர். அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அடியார் மடம், தொண்டர் மடம் ஆகியவற்றை நிறுவியவர். இந்த மடம் பின்னர் வைரமுத்துச் சுவாமிகள், நடராச சுவாமிகள் ஆகியோரால் நடாத்தப்பட்டது. இவர் தீவுப்பகுதியைச் சேர்ந்த முருகேசு சுவாமியாரால் உபதேசம் பெற்று சடைவரதர் என்ற தீக்கை நாமம் பெற்றார். இவரின் சீடர்களில் ஒருவராகிய அருளானந்தசிவத்தின் அழைப்பின்பேரில் ஏழாலை நால்வர் மடாலயத்தில் தங்கிய மறுநாள் இருந்தவாறே சமாதியடைந்தார். இவரது சமாதி ஏழாலையில் அமைந்துள்ளது. கச்சேரியடியில் அமைந்திருந்த கோயில் ஒன்றில் ஆடு மாடு பலியிடப்பட்டு வந்ததை நிறுத்தியமை சடைவரத சுவாமிகளின் செயற்பாடுகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படுகிறது.



கலாநிதி சு.குணேஸ்வரன்
ஆசிரியர் -
யா / சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை

மயில்வாகனம் சுவாமிகள் 1913 இல் ஆனைப்பந்தியில் பிறந்தவர். 1936 ஆம் ஆண்டில் துறவு வாழ்க்கையை மேற்கொண்டவர். மணியம்மடத்தில் சில காலந் தங்கினார். 1940 முதல் 1985 வரை ஆனந்தா ஆச்சிரமத்தை நடாத்தினார். மயில்வாகனம் சுவாமிகள் இரத்தினசாமி ஐயரின் தென்னங்காணிக்குள் ஒரு கொட்டில் அமைத்து அன்னதானப்பணி புரிந்துவந்தவர். அப்போது செட்டிமார்கள் மண்டபம் கட்டிக் கொடுத்தார்கள். ஆனந்தா ஆச்சிரமத்தையொட்டி அன்னதானப்பணி மட்டுமல்லாமல் பல ஆன்மீகப் பணிகளும் இடம்பெற்றுள்ளதை வரலாறு காட்டுகிறது. இறுதியில் 1985 இல் சமாதி அடைந்தார். இவரின் சமாதி அடையாளம் காணப்படவில்லை. **"கோயிலின் தெற்குத் திசையில் சிறிது தூர விலகி ஆட்கள் நடமாட்டமற்ற அந்தப் பகுதிய பரந்து விரிந்து புல்வெளியாகவும் பறவைகள் சரணாலயமாகவும் இயற்கைக் காடுகள் நிறைந்த மனதைக் கவரும் ரம்மியமான பகுதியாகவும் காணப்படுகிறது. இந்த இயற்கை எழில் நிறைந்த பகுதிகளில் உலாவந்து இயற்கையின் எழிலை உள்வாங்கி மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஏற்கனவே மயில்வாகனம் சுவாமிகள் ஈடுபட்டு வந்துள்ளார்கள்."** என்ற கூற்றும் கரும்பாவளிப் பிரதேசத்தையே குறிக்கின்றது.

இவரால் அமைக்கப்பட்ட ஆனந்தா ஆச்சிரமத்தை



மயில்வாகனம் சுவாமிகள்

யொட்டி பல இறைபணிச் செயற்பாடுகள் நிகழ்ந் துள்ளன. "எனது மறைவுக்குப் பின் நீ எங்குமே போக-வேண்டாம். முருகன் காலடியிலேயே இந்த அன்னதானப் பணியையே தொடர்ந்து செய்துவா. முருகன் துணை நிற்பான்" என்று ஆனந்த ஆச்சிரம நிர்வாகியாக இருந்த மயில்வாகனம் சுவாமிகளின் அறிவுரையே சந்நிதியான் ஆச்சிரமத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தது என்று மயில்வாகனம் சுவாமிகளின் சீடராக இருந்த மோகனதாஸ் சுவாமிகள் நேர்காணல் ஒன்றில் குறிப் பிட்டுள்ளார்.

கரும்பாவளியில் அமைக்கப்பட்டிருக்கும் பெரிய சமாதி நாகமுத்து ஐயருடையதும் அவரின் மனைவி யினதுமாகும். இவற்றை விட அடையாளம் காணமுடி யாத பல சமாதிகள் கரும்பாவளியில் அமைந்துள்ளன. சந்நிதிச் சூழலுடன் தொடர்புடைய ஏனைய சித்தர்கள் சமாதியடைந்த இடங்களை ந. அரியத்தினம் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார். அதனால் அவை பற்றி இங்கு குறிப்பிடப்படவில்லை. இந்த வகையில் சந்நிதிச் சூழலில் இயற்கையடைந்த ஜேர்மன் சுவாமிகள், முருகேசு சுவாமி கள், மயில்வாகனம் சுவாமிகள் ஆகியோர் குறிப்பி டப்படுகின்றனர். இவர்களுக்கு சமாதி வைக்கப்பட்ட தகவல்களை அறியமுடியாதுள்ளது. வைரமுத்து சுவாமி கள், பரியாரியார் சுந்தரப்பா, தம்புச்சாமி, கொடிகாமம் சுவாமி, நாகமுத்து ஐயர் முதலானோரின் சமாதிகளே இனங்காணப்பட்டுள்ளன.

சின்னக்குட்டி வல்லிபுரம் சாத்திரியாரின் மாமன் மாமி (பெயர்கள் அறியப்படவில்லை) இருவரும் சந்நி-தியில் சிவதொண்டர்களாக இருந்துள்ளார். இவ்விரு வரின் சமாதிகளுடன் கொடிகாமம் மடத்தைச் சேர்ந்த சாமியார் ஒருவரினதுமாக மூன்று சமாதிகள் அருகருகே பீடமும் சிவலிங்க வடிவத்தையும் ஒத்தன வாக அமைந்துள்ளன. இவற்றுடன் வைரமுத்துச் சாமி களின் சமாதி அருகே அறையும் பீடமும் அமைந்த சமாதி தம்புச்சாமியினது என அடையாளம் காணப்பட்டுள்ளது. (தகவல் : து.சண்முகசுந்தரம், வயது 60, சந்நிதி கிழக்கு, தொண்டைமானாறு) இச்சமாதி அண்மையிலே இடிந்து விழுந்து சேதமடைந்துள்ளது. இச்சமாதியின் அருகி லேயே ஜேர்மன் சுவாமிகளதும் மயில்வாகனம் சுவாமி களினதும் உடல்கள் அக்கினியில் எரியூட்டப்பட்டன. ஆனால் அவர்களுக்கு சமாதி அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

கரும்பாவளிச் சூழலில் ஒருபகுதி மயானங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் சமூகவேறுபாடு பாராட்டும் வகையில் மயானங்கள் அமைக்கப்பட் டுள்ளமையும் கவனத்திற் கொள்ளத்தக்கது, செல்வச்சந்நிதி கோயிலுடன் தொடர்புபட்ட பூசகர்களை எரியூட்டி அடக்கம் செய்வதற்காக ஆற்றோரத்தை அண்டிய மேற் குப்புறமும் அதன் அருகில் சித்தர்களின் சமாதிகளுக்கு ஒரு புறமும் ஒதுக்கப்பட்டிருந்தன. உடுப்பிட்டிப் பிர தேச மக்களின் மயானம் ஒரு புறத்தில் அமைந்துள்ளது. அம்மயானம் தனியாகச் சுற்றுமதில் அமைக்கப்பட்டு பராமரிப்பில் உள்ளது. தொண்டைமானாறு பிரதேச மக்களின் மயானம் கிழக்குப்புறமாக அமைந்துள்ளது.

இக்கட்டுரையில் பெயர் குறிப்பிட்டு எழுதப்பட்ட சித்தர்கள் தவிர்ந்த சிலரின் வரலாறு பற்றியும் அவர்கள் இறுதியில் சமாதி அடைந்த இடங்கள் பற்றியும்




சடைவரத சுவாமி

ந. அரியரத்தினம் அவர்கள் **"சந்நிதியில் சித்தர்கள்"** என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். கரும்பாவளி தவிர்ந்த ஏனைய இடங்களில் சமாதி அடைந்தவர்கள் பற்றி இக்கட்டுரை கவனஞ் செலுத்தவில்லை. அத னால் அவர்கள் பற்றிய பதிவும் தவிர்க்கப்பட்டுள்ளது.

**(தொடரும்...)**

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு குயிலினும் இன்மொழியம்மை உடனுறை இரத்தின சாயாவனேசுவரர் - திருச்சாய்க்காடு

**தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 9ஆவது திருக்கோயில் திருச்சாய்க்காடு (சாயாவனம்)**



**"செந்நெலஞ்செறுவின் அன்னந்துஞ்சும்**
**பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டன்ன"** - அகநானூறு 73

பைஞ்சாய் (பசுமைசாய்) என்னும் கோரை மிகுந்த காட்டினுள் சிவபெருமான் வீற்றிருந்து அருளும் அற்புதத் தலமே திருச்சாய்க்காடு அருள்மிகு குயிலினும் இன் மொழியம்மை உடனுறை இரத்தின சாயாவனேசுவரர் திருக்கோயில். இது தற்போது சாயாவனம் என்று மக்கள் வழக்கில் வழங்கப்படுகிறது.

**அமைவிடம்: மயிலாடுதுறை, தமிழ்நாடு.**

இது சீர்காழிக்குத் தென்கிழக்கே 11.5 கி.மீ. தூரத்-தில் இருக்கிறது. இது காவிரி வடகரைத் தலங்களுள் ஒன்பதாவது ஆகும். சீகாழி, மயிலாடுதுறை ஆகிய நகரங்களிலிருந்து பூம்புகார் செல்லும் பேருந்துகளில் செல்லலாம்.

**இறைவர் திருப்பெயர்: அமுதேசுவரர், சாயாவனேசுவரர்**
**இறைவியார் திருப்பெயர்: குயிலினும் நன்மொழியம்மை**
**கோயில் மரம்: கோரை**
**தீர்த்தம்: காவிரி, ஐராவத தீர்த்தம்**
**வழிபட்டோர்: உபமன்னியு முனிவர், இந்திரன், ஐராவதம், இந்திரனின் தாயார், ஆதிசேடன், சம்பந்தர், அப்பர், ஐடிகள் காடவர்கோன், இயற்பகை நாயனார், சேக்கிழார் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.**

**பாமாலை: சம்பந்தர், அப்பர், ஐடிகள் காடவர்கோன் நாயனார், கருவூர்த்தேவர், சேக்கிழார்.**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**நித்த லுந்நிய மஞ்செய்து நீர்மலர் தூவிச்**
**சித்த மொன்றவல் லார்க்கரு ளுஞ்சிவன் கோயில்**
**மத்த யானையின் கோடும்வண் பீலியும் வாரித்**
**தத்துநீர்ப் பொன்னி சாகர மேவுசாய்க் காடே** *(2-38)*

**அப்பர் பெருமான் அருளிய திருப்பதிகம்**

**தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழு மார்க்கண் டேயன்**
**வீடுநா ளணுகிற் றென்று மெய்கொள்வான் வந்த காலன்**
**பாடுதான் செலலு மஞ்சிப் பாதமே சரண மென்னச்**
**சாடினார் காலன் மாளச் சாய்க்காடு மேவி னாரே** *(4-65)*

**திருத்தலச் சிறப்பு**

திருச்சாய்க்காடு, கோச்செங்கட்சோழன் கட்டிய மாடக் கோயில். பைஞ் சாய் என்னும் கோரை (பசுமை + சாய்) மிகுந்திருந்த தல மாதலின் சாய்க் காடு என்று பெயர் பெற்றதென்பர். காசிக்குச் சமமாகச் சொல்லப்படும் ஆறு தலங்களுள் இதுவும் ஒன்று. (ஏனையவை திரு வெண்காடு, மயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருவை யாறு, திருவாஞ்சியம்) இயற்பகை நாயனார் தம் மனை வியை இத்தலத்தெல்லை வரை அழைத்து வந்து இறை



வனுடன் வழியனுப்பி வைத்தார் என்பது வரலாறு.

உபமன்யு முனிவர், இந்திரன், ஐராவதம், இயற்பகை நாயனார் மூலவர் ஆகியோர் வழிபட்டதும் பேறு பெற்றது மான தலம். இத்திருக்கோயிலிற்கு சம்பந்தர் பதிகங்கள் இரண்டு அப்பர் பதிகங்கள் இரண்டு ஆக நான்கு இருக்கின்றன. மேலும் இத்தலத்தை ஐடிகள் காடவர்கோன் நாயனார் பாடியுள்ளனர். அப்பாடல் பின்வருமாறு:-

**அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பமதாய்க்**
**குஞ்சி வெளுத்துடலங் கோடாமுன் - நெஞ்சமே**
**போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்**
**சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து.**

### திருத்தல வரலாறு

இந்திரன் பெருமானின் தாயாரான அதிதிக்கு பூமியில் உள்ள சாயாவனேசுவரரை வழிபட வேண்டும் என்ற ஆசை நீண்ட காலமாக இருந்தது. அந்த ஆசையை நிறைவேற்ற அவர் பூமிக்கு வந்தார். தாயைக் காணாத இந்திரன், அவர் சாய்க்காட்டில் இருப்பதை அறிந்து, இத்தலத்தின் சிறப்பை உணர்ந்து கொண்டான். தாயார் தினமும் இத்தலத்தை வழிபடும் வகையில், இந்த கோயிலையே தனது ஐராவத யானையை வைத்து தேர் பூட்டி இந்திரலோகம் இழுத்து செல்ல முயற்சித் தான். கோயிலை இழுத்ததுமே உமையம்மையார் குயில் போல இனிமையாக கூவினார். (எனவே தான் அம்மையாருக்கு 'குயிலினும் இனிமொழியம்மை' என்ற திருநாமம் ஏற்பட்டது) உடனே சிவபெருமான் தோன்றி, "இந்திரா! இந்த கோயிலை தேவலோகம் கொண்டு சென்று வழிபடவேண்டும் என்று நினைக்காமல், இங்கு வந்து வழிபட்டு பலனடைவாயாக" என அருள்புரிந் தார் என்பது தொன்நம்பிக்கை.

### திருக்கோயில் அமைப்பு

இத்திருக்கோயிலுக்கு அண்மையில்தான் பூம்பு கார்க் காவல் தெய்வமான சம்பாதி அம்மன் கோயில் உள்ளது. இக் கோயில், ஓடுகள் வேயப்பட்டு முன்னால் இரு பூதங்கள் இருக்க, கோயில் குளத்திற்குத் தெற்கில் உள்ளது. முகப்பு வாயிலைக் கடந்ததும் கொடி மரமில்லை. கொடி மரத்து விநாயகர் மட்டும் உள்ளார். மாடக் கோயிலாகையால் நந்தி உயரத்தில் உள்ளார். வெளிவீதியில் சூரியன், இந்திரன், இயற்பகை நாயனார் துணைவியாருடன் உள்ள சந்நிதிகள் உள்ளன. அடுத் துள்ள நால்வர் சந்நிதியில் 'மூவர் முதலிகளே' உளர். விநாயகர், சுப்பிரமணியர், திருமகள், உயர்ந்த பீடத் தில் பைரவர், ஒன்பான்கோள் (நவக்கிரகம்) சந்நிதிகள் உள்ளன. பக்கத்தில் அம்பாள் சந்நிதி உள்ளது.

இங்குத் தனியே வைக்கப்பட்டுள்ள வில்லேந்திய வேலவர் ஐம்பொன் திருமேனி மிகச் சிறப்புடையது. சுவாமி சந்நிதி வாயிலில் இரு புறமும் தலப்பதிகக் கல்வெட்டுக்கள் உள்ளன. வாயிலின் மேற்புறம் இயற் பகை நாயனாருக்கு இறைவன் அருள் செய்த காட்சி சித்திரமாக வரையப்பட்டுள்ளது. உள்ளே சென்றால் நேரே மூலவர். சதுர ஆவுடையாரில் குட்டையான பாணத்துடன் கூடிய சிவலிங்கத் திருமேனி உள்ளது. மூலவருக்கு வலப்பால் நடராச சபை உள்ளது.

சித்திரை நிறைமதியில் தொடங்கி இந்திர விழா 21 நாட்களுக்கு நடைபெறுகிறது. ஆடி மறைமதியில் அன்னமளிப்பு, சித்திரை, வைகாசி திங்கள்களில் இயற் பகை நாயனார் பெயரில் தண்ணீர்ப் பந்தல், வைகாசி யில் குமர குருபரர் குருபூசை, மார்கழியில் இயற்பகை நாயனாருக்கு ஐந்து நாள் விழா, அதில் நான்காம் நாளிரவு இறைவன் காட்சி கொடுக்கும் நம்பிக்கை முதலிய சிறப்புக் கட்டளைகளும், விழாக்களும் நடைபெறு



கின்றன. நாள்தோறும் நான்கு கால வழிபாடுகள் நடை பெறும். இத்தலம் பழமையை எடுத்துக்காட்டும் விதமாக, "நெடுங்கதிர்க்கழனித் தண் சாய்க் கானம்" அகநானூற்றுக் குறிப்புகளும் உள்ளன.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**பாயிரம் பாடல் 3 கணபதி வணக்கம்**

**எடுக்கும் மாக்கதை இன்தமிழ்ச் செய்யுளாய்**
**நடக்கும் மேன்மை நமக்குஅருள் செய்திடத்**
**தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்**
**கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்**

**பொருள்**

உயிர்களைப் பிறவிக்குழியினின்றும் எடுக்கும் தன்மையுடைய இப்பெரிய புராணம், இனிய தமிழ் பாட்டுக்களாக இனிது நிறைவேறி உலகில் நிலவுகின்ற மேன்மையை நமக்கு அருள்செய்யும் பொருட்டு ஐந்து



சிவக்கவிமணி
சி.கே சுப்பிரமணிய முதலியார்

தடக்கைகளையும்தாழ்ந்தசெவிகளையும்நீண்டமுடியினையும் உடைய மதயானை முகமுடைய விநாயகக் கடவுளை மனதிலே பதிய வைப்போம்.

**விளக்க உரை**

ஐயா அவர்கள் எடுக்கும் மாக்கதை என்பதற்குப் பிறவியாகிய குழியில் இருந்து எடுக்கும் தன்மையுடையது இப்பெரியுராணம் என்று கூறியுள்ளார். **"என்னை இப்பவத்தில் சேரா வகை எடுத்து"** என்று சித்தியார் ஆசிரியர் கூறுகின்றார். தொண்டர்புராணத்தில் நம்பிகளுடைய துதியாகப் போற்றப்பட்ட **"உள்ளத்தில் ஒரு துளக்கம் இல்லோம்"** என்ற பாடலில் **"வினையின் குழிவாய் நின்று எமை எடுத்தாள்"** என்று சேக்கிழார் பெருமான் போற்றுகின்றார்.

நம்பிகள் திருமுதுகுன்றப் பெருமானிடத்தில் பெற்ற பன்னீராயிரம் பொற்காசுகளைத் திருவாரூர்க் கமலாலயத் திருக்குளத்தில் "பொன் செய்த மேனியினீர்" என்ற பதிகம் பாடி மூழ்கி எடுக்கின்ற பொழுது சேக்கிழார் பெருமான் என்னை வினைக்குழியில் இருந்து எடுத்தார் என்று போற்றுகின்றார். மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைத் திருவாரூர்க் கமலாலயக் குளத்தில் சுந்தரர் எடுத்த செயல் மிகவும் அற்புதமான ஒரு திருவருட் செயல்.

**"தடக்கை ஐந்துடைத் தாழ்செவி"**

அடியார்களின் வலிய வினைகள் யாவையும் போக்கி அருள்புரிவதற்குத் திடமும், பரப்பும் பொருந்திய ஐந்து கைகளும், அவர் குறை கேட்டருளச் சித்தமாய்த் தாழ்ந்த செவியும் உடையார் என்று ஐயா அவர்கள் உரை கூறுகின்றார். "உலகெலாம்" என்று கூத்தப் பெருமான் அடி எடுத்துக்கொடுத்தார். ஆதலான் அவரை முதலில் வணங்கி அதன்பின் நூல் தொடங்கி அஃது இடையூறின்றி இனிது நடக்கும் பொருட்டு விநாயக வணக்கம் செய்யப்பட்டது.

சாக்கிரத்தில் அதீதத்தைப் புரிய வல்லவர் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் ஆதலின் தமக்கு இடையூறு சிறிதும் அணுகாது என்பதை அறிந்துவைத்தாராயினும் ஆன்றோர் ஆசாரம் பாதுகாப்பதற்கும் உலகுக்கு அறிவுறுத்தற்குமாக இங்கு விநாயக வணக்கம் செய்தார் என்று சிவஞான மாபாடிய ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவர் சிவஞானமாபாடியததில் கூறியுள்ள கருத்தைச் சிவக்கவிமணி ஐயா அவர்கள் பின்பற்றி எழுதியுள்ளார். விநாயகப் பெருமான் தம்மை நினைப்பவர்களுக்கு வரும் எல்லா இடையூறுகளையும் போக்கி அவர்கள் எடுத்த காரியங்களையும் இனிதே முற்றுவிக்கும் தன்மையுடையவர் அது இறைவனது திருவாணை

**"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்**
**முன்னரே யுனதுதாண் முடியுறப் பணிவரேல்**
**அன்னர்தஞ் சிந்தைபோ லாக்குதி யலதுனை**
**உன்னலார் செய்கையை யூறுசெய் திடுதிநீ"**

என்பது கந்தபுராணம். விக்கினங்களையெல்லாம் (இடையூறுகளை) போக்குகின்றவராதலின் விக்கின விநாயகர் என்று அவருக்குப் பெயராயிற்று. நம்முடைய பிற்கால இலக்கியங்கள் அனைத்திலும் முப்பெரும் புராணங்களாக விளங்கக் கூடிய மூன்றினுள் கந்தபுராணம், திருவிளையாடல் புராணம் இரண்டிலும் விநாயகர்

காப்புச் செய்யுள் பாடியபிறகே நூல் செய்திருப்பதைக் காணலாம். பெரியபுராணம் இறைவன் அடி எடுத்துக் கொடுத்ததால் "உலகெலாம்" என்று இறைவனை வாழ்த்திப் பாடியுள்ளார் சேக்கிழார் பெருமான்.

### தடக்கை ஐந்து

விநாயகப் பெருமானுக்கு நான்கு கரங்களும் துதிக் கையும் சேர்த்து ஐந்து கரங்களாகக் கூறப்படும். ஐந்து கைகளின் செயல்களைச் சிவக்கவிமணி ஐயா அவர்கள் புராண அடிப்படையில் விளக்குகின்றார்.

பண்ணியம் (மோதகம்) ஏந்தியது ஒரு கை. இதனைத் தமக்காகப் பயன்படுத்திக் கொள்வார். ஒருகை இரத் தினக்கலசம் ஏந்தியது. இதனைத் தந்தை தாயார்க்கு உபசாரத்தின் பொருட்டு ஆக்குவார். ஒரு கை தமது ஒடித்த கொம்பினைத் தாங்கியது. இதைக் கயமுகாசுர னைக் கொன்று தேவர்களுக்கு அருள்புரியப் பயன்படுத் தினார். மற்ற இரண்டு கைகள் பாசமும் அங்குசமும் தாங்கியவை. இவ்விரண்டு கைகளையும் உயிர்களைக் கட்டுப்படுத்தும் ஆணவமாகிய மத யானையைப் பிணித்து அடக்கி உயிர்களைக் காப்பதற்காகப் பயன்படுத்துவார்.

இவ்வாறு தம் கைகள் ஐந்தில் மற்றவர்களுக்கு ஒவ் வோர்கையும் கருணையினால் உயிர்களுக்காக இரண்டு கைகளையும் வைத்தார் என்று இவரது கருணைப் பெருக்கைக் கச்சியப்பமுனிவர் தணிகைப் புராணத்தில் **"பண்ணியம் ஏந்தும் கரந்தனக் காக்கி"** என்ற பாடலில் பாராட்டியுள்ளார்.

### கடக்களிறு

கடம் - மதம் யானைக்கு உரியது மூன்று மதம். இங்கு விநாயக மூர்த்திக்குத் தலை ஒன்றுமே யானை உருவுடையது ஆதலின் கன்னமதம், கபாலமதம் எனும் இரண்டுமே கொள்ளப்படும். பீச்சமதம் விநாயகப் பெருமானுக்குக் கிடையாது. பெரும்பான்மை பற்றி மும்மதத்தன் என்று உபசரிப்பதும் வழக்காம்.

### இன்தமிழ்ச் செய்யுள்

சொல்லால் இனிமை இலக்கணங்களாலும் பொரு ளாலும் இனிமை. இறைவனைச் சுட்டிக்காட்டுகின்ற இயல்பாலும் உணரலாம். இனிமை என்பதற்கு இறைவன் அருட்பேறு என்றும் கூறலாம். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழார் பிள்ளைத்தமி ழில் குறிப்பிடும் பொழுது **"தெய்வம் மணக்கும் செய்யு ளெல்லாம்"** என்று போற்றுகின்றார்.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி
நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்

# பவளவிழா காண்கிறார்
# தவத்திரு. கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள்

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பின் தானே புறப்பட்டு ஆச்சிரமத்திற்கு வெளி- யே சென்று உதவத் தொடங்கினார்.

பதுளையில் உள்ள உறவுகளுக்கு சத்துணவு, மலை யகப் பாடசாலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலை களுக்கான அடிப்படைத் தேவைகளை வழங்குதல், கெக் கிராவவில் பிள்ளையார் ஆலயத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு உதவுதல் என மலையகம் சார்ந்து அவரது உதவி தொடர்கின்றது. ஆச்சிரம அன்பர் ஒரு வரின் உதவியுடன் முல்லைத்தீவில் வீடும் அமைத் துக் கொடுத்துள்ளார். இத்தகைய வீடமைப்புப் பணி இன்னும் விரிவுபெற்று வருகின்றது. மலசலகூடம் அமைத்துக் கொடுத்தல், வறுமையுற்ற திருமணப் பெண்களுக்கு தங்கநகை வழங்குதல், தண்ணீர் வளத் திற்காகக் கிணறு அமைத்துக் கொடுத்தல், வைத்திய சாலைகளுக்கு மருந்து பொருள்கள் வழங்குதல் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு திங்கள்தோறும் உதவிப் பொருள்கள் வழங்குதல், வாழ்வாதார உதவிக்காக பண்ணை வளர்ப்பை ஊக்குவிக்க ஆடு, மாடு, கோழி வழங்குதல் , கற்றல் உபகரணங்கள் வழங்குதல், வறிய பிள்ளைகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்குதல் என அவரது பணிகள் விரிவுபெற்றுச் செல்கின்றன.

வறிய மாணவர்களுக்கான உதவி என்ற வரிசையில் பல்கலைக்கழகத்தில் கற்கும் தமிழ் சிங்கள இஸ்லாமிய பிள்ளைகள் சமய பேதம் பாராது உதவிகள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். தன்னலமின்றி அறப்பணி செய்யும் மோகன் சுவாமி பல்வேறு அமைப்புகளாலும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். அமுத வாரிதி, அறப்பணி அரசு, சமூகச் சுடர் எனப் பலவிருது கள் அவரை அலங்கரிக்கின்றன. இந்தியப் பல்கலைக் கழகம் ஒன்று 2017 இல் கௌரவ டாக்டர் பட்ட- த்தை வழங்கியது. யாழ்ப்பாண மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழு 2018 இல் யாழ் விருதை வழங் கிக் கௌரவித்தது. எது எவ்வாறெனினும் சந்நிதியான் மண்ணில் மோகன் சுவாமிகளின் அறப்பணிகள் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையே அவருக்குரிய மிகப்பெரிய விருது ஆகும்.

அடியார்க்கு அமுது செய்விக்கும் மேலான பணி யுடன், அளப்பெரும் பணிகள் பல செய்து வரும் தவத் திரு. கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமிகளை போற்றி வாழ்த்துவதோடு, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந் திட எல்லாம் வல்ல ஐம்பூதநாதப் பெருமானிடத்தில் விண்ணப்பம் வைக்கின்றோம்.

**தகவல் - சந்திரமௌலீசன் லலீசன் அவர்களின் முக நூலில் இருந்து**

திருச்சிற்றம்பலம்

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிலைபெற்றார் கயிலைநாதர்



சைவமும் தமிழும் ஓங்கி விளங்குகின்ற சிவபூமியாம் ஈழத் திருநாட்டின் கிழக்கில் கல்விக் கழகமாகத் திகழும் வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் அமையப் பெற்றுள்ள ஆலடி அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயிலின் மூன்றாவது குடமுழுக்குப் பெரு விழாவை முன்னிட்டு, அருள்மிகு கயிலைநாதர் சந்நிதி அமைக்கப்பட்டு, கடந்த பகைக்கேடு ஆண்டு (குரோதி), மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 27ம் நாள் (12-09-2024) வியாழனன்று (மூலம்) நாண்மீனும் சித்த ஓகமும் கூடிய காலை 7.33மணிக்கு மேல் 9.03 மணிக்குள்ளான விடைவான் வேளையில் கடவுள் மங்கல நன்னீராட்டு சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது.

வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் அமையப் பெற்றுள்ள ஆலடி அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயிலானது கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு முன்னர், கிழக்குப் பல்கலைக்கழகம் அமையப் பெற முன்னரே, அரச மரத்தடியில் மக்களால் வழிபடப் பெற்று வந்த கோயிலாகும். பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகம் அமையப் பெற்றவுடன், பல்கலைக்கழக மாணவர்கள் பூசைகளை ஆற்றி வந்தார்கள். அதன் பின்னர் 1996ம் ஆண்டு திருக்கோயில் பெரிதாக்கப்பட்டு, வவுனியாவிலிருந்து விநாயகர் திருமேனி கொண்டுவரப்பட்டு, நிலைப்படுத்தி, தைப்பூச நன்னாளிலே முதலாவது திருக்குட நன்னீராட்டு பெரு விழாவை நடத்தினார்கள்.

தொடர்ந்து 2010ம் ஆண்டு திருக்கோயில் மீள் புனரமைப்பு செய்யப்பட்டு இரண்டாவது திருக்குட நன்னீராட்டு பெருவிழா சிறப்பாக இடம்பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு மூன்றாவது திருக்குட நன்னீராட்டு பெருவிழா நடாத்தத் திட்டமிட்டிருந்த திருக்கோயில் நிர்வாகத்தினர், கோயில் புனரமைப்பு திருப்பணிக்காக, தென்னாடு செந்தமிழ் ஆகம முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பார்த்தீபன் அவர்களிடம் நிதி கோரி வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அந்த வகையில் தென்னாடு சிவமட முதல்வர் நிதி பங்களிப்பு செய்ததோடு, திருக்கோயில் வளாகத்தினுள், சிவன் சந்நிதி அமைப்பதற்கான வேண்டுகோளையும் விடுத்திருந்தார். அதற்கு திருக்கோயில் நிர்வாகத்தினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, ஒசுத்திரேலியாவைச் சேர்ந்த சிவத்திரு. சிவலிங்கம் பாக்கியராசா மற்றும் திருமதி. கம்சாஜினி பாக்கியராசா குடும்பத்தினரின் நிதி அன்பளிப்பில் இறையருளால் கயிலைநாதர் சந்நிதி நிறுவப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகம் தொடங்கிய காலத்தில், எவ்வாறு விந ாயகப் பெருமானை மாணவர்களே பூசை செய்து வழிபட்டார்களோ, அவ்வாறு அனைவரும் தாமாகவே பூசை செய்து வழிபடக்கூடிய வகையிலேயே அருள்மிகு கயிலைநாதர் சந்நிதி அமைப்பெற்றுள்ளது. எனவே சிவன் அழித்தல் கடவுள், சிவன் உக்கிரமானவர், சிவனை ஆகம விதிப்படி மட்டுமே பூசை செய்ய வேண்டும், பெண்கள் சிவனருகில் செல்லக்கூடாது என்ற உண்மைக்கு புறம்பான வதந்திகளை விடுத்து, போதொடு நீர் சுமந்து ஏத்தி எம்பெருமான் அருகே புகுந்து, அவர் திருப்பாதம் கண்டு பெருவாழ்வை பெற்று உய்வீர்களாக.

**ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்**
**நான் நிலாவி இருப்பன் என் நாதனைத்**
**தேன் நிலாவிய சிற்றம்பலவனார்**
**வான் நிலாவி இருக்கவும் வைப்பரே.**


**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தென்னாடு - சைவ மாணவர் சபை**

# கயிலைநாதரின் கடவுள் மங்கல நன்னீராட்டு விழாப் பதிவுகள்



# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**சந்தான குரவரில் ஒருவராகிய மறைஞான சம்பந்தர் ஏதாவது நூல் எழுதியுள்ளாரா?**

இல்லை. அவர் அருணந்திசிவத்தின் மாணாக்கராகவும் உமாபதி சிவத்தின் குருவாகவும் இருந்த ஞானியாவார்.

**தமிழ் வேதம் எனப்படும் திருமுறைகளுக்கும் சித்தாந்த நூல்களுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது?**

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் திருமுறைகளில் விரவி இருக்கின்றன. சைவ சித்தாந்தத்துக்கு உடன்பாடான கருத்துக்களைத் திருமுறைகளில் காணலாம், மாறான கருத்துக்களைக் காணமுடியாது. திருமுறைகளுக்குத் தெளிவான பொருள் காண்பதற்கு சைவ சித்தாந்த அறிவு தேவை. அவற்றைச் சைவ சித்தாந்த ஞானப் பின்னணியிலே விளக்க வேண்டும்.

**சைவ சித்தாந்த கருத்துக்களுக்கு மூலம் சைவ ஆகமங்கள் என்ற கருத்துண்டு. இன்று இந்த ஆகம நூல்கள் பல இல்லை. இது சைவத்துக்குப் பெருங்குறையல்லவா?**

சைவ ஆகமங்களின் ஞானபாதக் கருத்துக்களே சித்தாந்தக் கருத்துக்களாக உருவாயின என்று கூறுவர். இதனாலேயே சைவ சித்தாந்தத்தை ஆகமாந்தம் என்று கூறுவதும் உண்டு. சைவ ஆகம நூல்கள் பலவற்றை நாம் இழந்து விட்டோம் என்பது உண்மையே. இது ஒரு பெருங்குறையே. ஆயினும் இறையருளால் ஆகமங்களில் உள்ள தேவையான சித்தாந்தக் கொள்கைகள் ஞானிகளால் பதினான்கு மெய்கண்ட நூல்களில் தரப்பட்டுள்ளன. இந்த ஞானிகள் ஆகமங்களில் தெளிந்த ஞானம் உள்ளவராக விளங்கினார்கள். அருணந்தி சிவாசாரியாரை சகலாகம பண்டிதர் என்று அழைப்பதே இதனை உணர்த்துவதாக உள்ளது. ஆகவே சைவ சித்தாந்தம் படிப்பதற்கு ஆகமங்கள் இல்லாதது ஒரு குறையல்ல. ஆனால், மெய்க்கண்ட நூல்கள் தமிழில் இருப்பதால், தமிழ் மொழி அறிவு இல்லையாயின், அது ஒரு குறையாகும்.

**திருக்குறள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான ஒரு நூல் எனக் கூறப்படுகிறது. ஆனால் இது ஒரு சைவ நூல் என்று சைவர்கள் கருதுகிறார்கள். இது குறித்த விளக்கம் என்ன?**

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய பரந்த நோக்கில் அமைந்த, அறிவியற் கருத்துக்கள். ஆகவே தமிழகத்துத் தத்துவமான சைவசித்தாந்ததில் பிற சமயக் கருத்துக்கள் சிலவும் பிரதிபலிக்கப்படுவது இயல்பானது.

திருக்குறள் நூல் மனித சமுதாயத்துக்குப் பயன்படும் வகையில் பரந்த நோக்கில் எழுதப்பட்டது. இதனால் இதில் பிற மதத்தவரின் கொள்கைகளும் இடம் பெறு-கின்றன. ஆயினும் திருக்குறட் கருத்துக்கள் அனைத்தும் எல்லாச் சமயங்களுக்கும் உடன்பாடானவை அல்ல என்பது கருதற்பாலது. சைவ சமயத்துக்கோ அல்லது அதன் தத்துவத்துக்கோ உடன்பாடற்ற கருத்துக்கள் என்று எவற்றையும் அதில் காண முடியாது. சைவசி-த்தாந்தக் கருத்துக்கள் பல திருக்குறளில் தெளிவாகத் தரப் பட்டுள்ளன. (இது குறித்த விரிவான விளக்கத்தை இந்நூலாசிரியரின் ‘வள்ளுவம் வழங்கும் தமிழர் தத்-துவம்’ என்ற நூலில் காண்க.)

இத்தகைய காரணங்களால் திருக்குறளைச் சைவ நூலாகவும் திருவள்ளுவரைச் சைவ ஞானியாகவும் சைவ மக்கள் கருதுகின்றனர். தவத்திரு ஆறுமுக நாவலர் திருவள்ளுவரை “திருவள்ளுவ நாயனார்” என்று போற்றுகிறார். திருக்குறட் கருத்துக்களும் சொல்லாட்சிகளும் மெய்கண்ட சாத்திர நூல்களில் இடம் பெறுவதையும் காணலாம்.

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை**
**(கலாநிதி க. கணேசலிங்கம்)**



தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Foundation stone laid for Saiva Mandram Cultural Centre

**It's not a beginning of a physical structure but a dawn of a new chapter for the Sydney Murugan Comunity**

The 15th of September 2024 marked a significant milestone for the Sydney Murugan Temple, as the much-anticipated Stone Laying Ceremony for the development of the new community hall took place. This momentous event not only symbolised the start of an ambitious project but also embodied the strength and unity of our diverse and vibrant community. The community hall is not just an architectural project; it represents the culmination of years of dedication, hard work, and a shared vision for the future. The committee members, volunteers, and supporters who have devoted countless hours to this effort have brought the community to this moment.

The presence of several esteemed leaders at the ceremony further underlined the importance of the occasion. Among those attending were Hon. Julia Finn MP, Hon. Charlton MP, Councillor Suman Saha of Cumberland City Council, and Hon. Anthony D'Adam, a member of the NSW Legislative Council. Their support reflects the broader impact of this project, extending beyond the temple and into the wider community. Their participation today demonstrated a shared commitment to fostering cultural inclusion and supporting initiatives that enrich the lives of all residents.

One of the most important aspects of this new hall is its role in preserving and promoting Tamil Saiva culture. The Sydney Murugan Temple has long been a sanctuary for Tamil Saivas. With the development of this new community space, the temple's ability to preserve and promote Tamil Saiva culture to future generations will be significantly enhanced. The hall will serve as a venue for religious festivals, cultural programs, and spiritual classes, all vital for nurturing a strong connection to our Tamil Saiva roots. The modern classrooms and library will provide a space for learning the Tamil language, Saiva scriptures, and the ancient Thirumurais of the Nayanmars. Children and youth will have the opportunity to study the Thirukkural, Thevaram, and other sacred texts in a formal setting, ensuring that the knowledge and wisdom of our ancestors continue to live on in the hearts and minds of the next generation. Moreover, the multifunctional hall can also host cultural performances such as Bharatanatyam, classical music concerts, and Tamil dramas, which celebrate the artistic traditions of Tamil Saivam. These events not only entertain but also educate the audience, helping them reconnect with the spiritual essence of our culture.


In conclusion, the Stone Laying Ceremony was not just the beginning of a physical structure, but the dawn of a new chapter for the Sydney Murugan Temple and its community. It represents hope, collaboration, and the promise of a brighter future. Importantly, it represents the preservation and promotion of Tamil Saiva culture, ensuring that our spiritual and cultural heritage continues to flourish in the hearts of future generations.

# சிட்னி முருகன் திருக்கோயில் சமூக மண்ட அடிக்கல் நாட்டல்

## Sydney Murugan Temple Community Hall Stone Laying Ceremony (15th Sept 2024)



# Contemplating the grace imbibed amongst clans of Devotees



Valam vantha madavarkal nadamada.....sings Saint Thirugyana Sambanthar, (The ladies who came round the temple premises were dancing. The musical instruments were making the respective sound for the dance. Some monkeys by hearing the drum sound, suspected as thunder and climbed up the trees and saw the clouds. (with a suspicion that it would rain)) enticing the auspicious scene of the cosmic dance afoot at Thiruvaiaaru thirukshethram in our minds.

The sounds of the 'Muzhavu' instrument capably accompanying the rampant dance, sounds like literal Thunder causing a few of the inhabitant monkeys to leap branches, and seek for signs of rain. Why is it that only a few monkeys do this instead of it being all of them together? It is reasoned that the ones who leapt over seek out the rain clouds where the novices to Thiruvaiaaru and that the more permanent ones, given their routine exposure, were well accustomed to the daily rituals and bore the knowledge of the source of such sounds, causing them not to seek out things like the sky, not of ignorance but of clarity.

Similarly Pancharam Konchu Kili vanthu... sings Arunagirinathar. (The parrot inside the cage came near the exit point again and again calling vayalur murugan as five armed pandit's (Ganesa's) brother.). The troupes of verbally sound and gifted parrots, given their exclusive residency in Vayaloor, are always singing the name of Lord Murugan. Reasoned by the fact that the lord's name is the constant talk of the town in Vayaloor, the untamed parrots naturally picked it up without human intervention!

Just by being at holy vicinity at all times, if even organisms of limited senses can nurture clarity and compassion, what must we humans with the six senses strive to do? Be in constant company with the Asthikas. Saint Manikavasakar sings on this as....




**Srisankarshan Srisatkunarajah**
**Next Generation Editor**
**2023 Batch,**
**Jaffna Hindu College**


**"Adiyaenun adiyaar naduvul irukkum**
**arulaip puriyaay ponnampalaththem mudiyaa muthalae"**

The lord is encompassed within the compassion of the devotees. To be a recipient of his grace, the act of associating ourselves with the devotees itself is sufficient, says Saint Vasakar, which is the truest form of grace and benevolence. Possession of wealth, stature, spouse, kin, praise and governance are what most of us think what being immersed in grace looks like. How could surrounding oneself with such volatile concepts ever be a sign of grace? Never, it is indeed the opportunity to be in communion with devotees, the highest form of divine benevolence.

Once, saint Manikavasakar hesitates as he joins a clan of devotees anew and prays for the weights and the sins of his past to be disseminated first, for him to be worthy of the pursuit.

**"Puththadiyoam punmaitheerth thaadkondaat pollaathoa**
**Eththo nin anpudaimai elloam ariyoamoa" says he.**

By immersing ourselves in the company of Asthikas, the aversions of the external weaken, our inner and outer beings purify, contemplate and naturally realise that the Divinity which stands in unison with us, separate from us, and indifferent to us, at various points and instances yet all at once throughout time, is of the highest might. This analogy is conveyed by Thiruvalluvar as

Ariyavatru Lellaam Aridhe Periyaaraip
Penith Thamaraak Kolal – Kural 443

Therefore, to maintain ourselves worthy of boundless acts of kindness of the lord and to seek union with him, us devotees shall pray to him, he who dances in the arena of 'Ponnampalam'.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal





Siva P.Abiram SG

In the dream, Appar heard a Godly voice calling him to Thiruvaimoor. Appar woke up and saw a divine light moving towards Vaimoor. Appar followed the light. Near the temple at Vaimoor the light had gone into the temple and disappeared. Appar without seeing the Light stood there.

Without seeing Appar in the resort, Sampandar also came to Vaimoor in search of him. Appar saw him, and sang that "Sampanthar had sung more effectively than me. Now he had come. Can you disguise yourself even to Sampanthar?"

The lord now showed his divine dance to Sampanthar. Seeing this, Sambandar showed the scene to Appar and sang the song,

After the incident of the opening and closing of the doors, Sambandar and Appar returned to the resort. Appar could not sleep. He thought that the doors were opened after he had sung many songs and scolded the God that he was merciless. But the doors were closed when Sambandar had sung one song. Comparing the two incidents Appar thought "whether I have been against the willingness of God?" with these thoughts he began to sleep.

தளிரிள வளர்ஒளி தனதெழில் தருதிகழ் மலைமகள்
குளிரிள வளர்ஒளி வனமுலையிணை அவை குலவலின்
நளிரிள வளர்ஒளி மருவுநள்ளாறர் தம் நாமமே
மிளிரிள வளர் எரியிடில் இவை பழுதிலை மெய்ம்மையே

Thalirila valaroli thanathezhil tharuthigazh malaimagal
Kulirila valaroli vanamulaiyinai avai kulavalin
Nalirila valaroli maruvunallaarar tham naamame
Milirila valar eriyidil ivai pazhuthilai meimmaiye

Appar with joy sang that, "I have seen! I have Seen!".

**To be continued...**

# நீத்தார் கடன் செய்ய சிறந்த திதி நாள் பேரொடுக்க மறைமதி (மாலயம்) இம்முறை புரட்டாசி 16 (ஒக் 2, 2024) புதன்கிழமை அன்று நோற்கப்படும்



மாலய மறைமதி எனபது பிதிர்களுக்குரிய சிறப்பு நாளாகும். இந்நாளில் அடியவர்கள் விரதமிருந்து சிவனை வழிபட்டு, மறைந்த உங்கள் பெற்றோர்கள், அவர்கள் வழிவந்தவர்கள் மற்றும் உங்கள் முன்னோர்களையும் வணங்கி, அவர்களுக்கு படையலிட்டு அவர்களின் அருளாசிகளைப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் துணை நிற்கட்டும். பெற்றோரின் அல்லது உறவினர்களின் திதி தெரியாதவர்களும் இந்நாளில் விரதமிருந்து பிதிர் குறைகளில் (பித்துரு தோஷம்) இருந்து விடுதலை பெறலாம்.

### மானிடப்பிறப்பின் சிறப்பு

**உரைசேரு மெண்பத்து நான்குநூ றாயிரமாம் யோனிபேதம்**
**நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்கோயில்.**

என்ற திருஞானசம்பந்தர் சுவாமி அவர்களின் பாடலின் படி , எண்பத்து நான்கு நூறாயிரத்தில் ஒன்று (1/ 8,400,000) நிகழ்தகவில் தான் மனிதராக பிறக்கிறோம். இந்த மனிதப்பிறப்பென்பது ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் கூடிய அருமையான இறைவனின் படைப்பாகும். இந்த ஆறாம் அறிவினை பயன்படுத்தி நிலையான இன்பம் (பேரின்பம்) , நிலையில்லாத இன்பம் (சிற்றின்பம்) போன்றவற்றினை பிரித்தறிந்து பேரின்பப்பெருவாழ்வினை அடையும் வழியினை கடைபிடித்து இவ்வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மீண்டும் பிறப்பில்லா பெருவாழ்வினை அடைவதே பிறவிப்பயனாகும்.

அவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்தவர்களுக்கு அவர்களின் திதியில் அல்லது பொதுத் திதியாகிய புரட்டாசி மறைமதியில் விரதமிருந்து படையலிட்டு மற்றவர்களுக்கும் தானம் மற்றும் உணவளித்து எங்கள் வாழ்வினை வளப்படுத்திக் கொள்வோம்.

### மறைமதி (அமாவாசை) தினத்தில் தென்புலத்தார் வழிபாடு மற்றும் பேரொடுக்கம் (மாலய அமாவாசை)

வருடத்தில் தைத் திங்கள் மறைமதிப் பிறைநாள் (தை அமாவாசை) மற்றும் ஆடித் திங்கள் மறைமதிப் பிறைநாள் ( ஆடி அமாவாசை) முக்கியமான நாட்களாகும். இத்தினத்தில் விரதமிருந்து , நீர் நிலைகளில் அல்லது கிணற்றில் நீராடி இறந்தவர்களுக்கு வழிபாடு செய்வது சிறப்பானதாகும். அத்துடன் எள்ளுடன் தர்ப்பை புல் சேர்த்து , நீர் இறைத்து , பிண்டம் வைக்கக்கூடியவர்கள் பிண்டம் வைத்து வழிபாடு செய்யலாம். ( அண்டத்தில் இருப்பது பிண்டத்தில் இருக்கும் என்பார்கள்).

அத்துடன் ஆண்டுபிறைநாளாக அல்லது ஆண்டுத் திதியாக மற்றும் திங்கள் (மாத) பிறைநாளில் அல்லது திதியில் தென்புலத்தார் வழிபாடு செய்ய முடியாதவர்கள், பலவருடங்களாக செய்யாமல் விட்டவர்களுக்கு ஒரு சிறப்பான செய்தி. கவலையைவிட்டு கன்னி நல்லோரை புரட்டாசி மாதம் வருகின்ற மறைமதிப் பிறைநாள் (புரட்டாசி அமாவாசை) தினத்தன்று இந்த வழிபாட்டினை செய்யலாம். முன்னர் குறிப்பிட்டது போல கதிரவனின் தென்புலப்பயணம் தூய்மைப்படுத்துவதற்கானது (ஒடுக்க காலம்), ஆகவே இந்த மறைமதிப் பிறைநாள் மேலும் சிறப்பு பெறுகிறது. அத்துடன் இந்தக் காலப்பகுதியில் எம்முன்னோர்கள் பூமிக்கு வந்து எமது வழிபாட்டினை மற்றும் படையலை ஏற்கின்றனர் என்றும் கருதப்படுகிறது. அதற்கும் மேலாக அவர்களுக்கு அருளூட்டும் வகையில் நாங்கள் வழிபாடுகள் , சிவபூசை, சிவமங்கல நீராட்டு , சிவப்பெருவேள்வி , அடியாருக்கு அமுது , மற்றைய உயிரினங்களுக்கு உணவு , பசுவுக்கு உணவு , காக்கைக்கு உணவு படைத்தல் போன்றவற்றினை செய்து பலன்களை பெறலாம்.

மாலய மறைமதி எனபது பிதிர்களுக்குரிய சிறப்பு நாளாகும். இந்நாளில் அடியவர்கள் விரதமிருந்து சிவனை வழிபட்டு, மறைந்த உங்கள் பெற்றோர்கள், அவர்கள் வழிவந்தவர்கள் மற்றும் உங்கள் முன்னோர்களையும் வணங்கி, அவர்களுக்கு படையலிட்டு அவர்களின் அருளாசிகளைப் பெற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ எல்லாம் வல்ல எம்பெருமான் துணை நிற்கட்டும். பெற்றோரின் அல்லது உறவினர்களின் திதி தெரியாதவர்களும் இந்நாளில் விரதமிருந்து பிதிர் குறைகளில் (பித்துரு தோஷம்) இருந்து விடுதலை பெறலாம்.

### மணிவாசகரின் திருவாசகம் - அச்சோப் பதிகம்

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறு யார்பெறுவார் அச்சோவே**
**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**
**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

# Cycle of birth and death - Why does it happen?



**Last month Summary :**

Sivakan, a 7 year old kid, was talking with his friends when they asked him, who brings about all these changes in the worldly things, the matter? He replied, all these changes happen by the divine will (aanai) of the Lord Almighty".

It has become customary to meet daily and discuss these topics. We asked ourselves, "Why does the man (soul) have to be born again and again?" Is it not enough to have only one birth? Christians and Muslims do not believe in rebirth at all.

Each one of us came up with an observation around our area. In the next street there is a child who was born blind. In the home for handicapped persons, we have seen many born-lame persons. It is very saddening to see the deaf and dumb students. Some of them are studying in the school for deaf and dumb. We see somebody born in a wealthy family with a silver spoon in his mouth. At the same time some others are born in rags in the poorest of the poor families. What a disparity is seen among the babies right from birth onwards!

Why is there so much discrepancy even at birth? If the Lord Almighty is said to be compassionate why can't He bless everyone uniformly? Such questions haunted us.

The souls possess limited intelligence. They have the discriminating ability too. There is a choice of improving themselves or lagging behind in their journey. Some of the souls are born with ill health or challenged sense organs that makes it more difficult for them in this birth.

The Lord Almighty is gracious enough to give them another chance to rectify their actions, by providing another lease of life for them, though punishing with a defective body. Thus we arrived at a set of conclusions based on observation and logical thinking.

'The Soul had a previous life prior to this life. The present good or bad situations in this life are the results of meritorious and non-meritorious deeds done in the earlier lives.

By the same logic, deeds performed in this present life will decide the texture of our next life. Thus Soul's each and every action (Vinai) has a past and present history behind them besides creating a blueprint for its future life. All these are orchestrated by the Lord Almighty. He conducts the symphony impartially without any ambiguity.

Saiva Philosophy Reference: The takeaway of this story is some souls are born with challenged organs , due to the actions of their past lives, similarly good deeds performed in this life will decide the future for our next life.

**Reference: Saiva Siddhantham – A Way of Life by Kovai Kizhar**

# தென்னாட்டு நிகழ்வுகள்



கிழக்குப் பல்கலைக்கழக குழுவினர் தென்னாட்டிற்கு வருகை (01-09-2024)



களுதாவளை பிள்ளையார் திருக்கோயில் நிர்வாகத்தினர் தென்னாட்டிற்கு வருகை (31-08-2024)



அமரர்களான முத்துத்தம்பி செல்லமுத்து குடும்ப சந்ததியினர் குலதெய்வ வழிபாடு (20-08-2024)



ஆவணிச் சதுர்த்தி சிறப்பு வழிபாடுகள் (07-09-2024)

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆவணித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (19-08-2024)



தென்னாட்டில் தீக்கை வழங்கல் நிகழ்வு (09-09-2024)



அமரர் இராஜேஸ்வரி அம்மா திருநாவுக்கரசு அவர்களின் திருவடிபேற்று வழிபாடுகள் (21-08-2024)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து ஒன்பதாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி அச்சகத்தில்” அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 1ம் நாள் நிறைமதி அன்று (17-09-2024 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org